சுதேச வைத்தியத்துறை என்பது இன்று பக்கவிளைவுகள் இன்மை காரணமாக விரும்பி ஏற்கப்படும் ஒரு வைத்தியத்துறையாக காணப்படுகிறது. இந்த சுதேச வைத்தியமானது எமது நகரப் பிரதேசத்தில் பண்டைக் காலம் முதல் பரம்பரை பரம்பரையாக மேற்கொ[illegible]ப்பட்டு வருகின்றன. பண்டைக் காலங்களில் வைத்தியத் தகவல்களை ஏடுகளில் பொறித்து வைத்திரு[illegible]மையாக இருந்தது. அந்த வகையில் நமது நகர பிரதேச வைத்தியர்கள் வைத்திய நுட்பங்களை பா[illegible]களாக்கி அவற்றை ஏட்டு வடிவில் பேணி வந்தனர். இவ்வைத்திய சேவையை பேணுவது நகரத்தின் சிறந்த செயற்பாடாக உள்ளமையால் இவர்களைக் கௌரவிக்கும் முகமாக இவ் ஏடுகள் காட்சிப்படுத்தப்பட்டுகின்றன.

10. கல்வியே நிரந்தர செல்வம்

யாழ்ப்பாணத்தவரின் தனிச்சிறப்பு மிக்க செல்வம் கல்விச் செல்வமாகும். பண்டைக் காலம் முதல் இன்று வரை பாலியல் சமத்துவத்துடன் கல்வியைத் தமது கண் போல பாதுகாத்துவருகின்றனர். அந்த வகையில் எமது நகரத்தவரும் சளைத்தவரல்ல. கல்விக்கான சேவையினையும் நகராட்சி மன்றம் தன் பணிகளில் ஒன்றாக மேற்கொண்டு எமது மாணவர்களின் அடைவு மட்டங்களை உயர்த்திவருகின்றது. நூலக செயற்பாடுகள், பொதுப்போட்டிகள், கருத்தரங்குகள் வழிகாட்டற் செயற்பாடுகள் மேற்கொள்ளும் நற்பணியினை நகராட்சி மன்றம் தங்கள் முன் எடுத்துக்காட்டுகின்றது.

11. துறைமுக மாதிரியும் அருகில் கப்பலொன்றும்

பருத்தித்துறைத் துறைமுகமானது இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாகும். இது பண்டைக் காலத்து வணிக செயற்பாடு முதல் போக்குவரத்துச் செயற்பாடுகள் வரை அனைத்து மக்களுக்கும் பயனுடைய துறைமுகமாக விளங்குகிறது. இன்றைய சூழ்நிலையில் அதன் பொலிவிழந்து காணப்பட்டாலும் அதனை எம்மால் காட்சிப்படுத்தப்படும் அமைப்பிற்கேற்ப பொலிவடையச் செய்வதே எமது நோக்கமாகும்.ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை நகர சபை

### கடல்வளம்

கடல்வளமே எமது நகரத்தின் சொத்து. எமது நகர பிரதேசத்தில் கடல் வளத்தினைக் கொண்டே கூடுதலான மக்கள் தமது செல்வத்தை ஈட்டிவருகின்றனர். இப்பிரதேசத்தில் பாரம்பரிய மீன்பிடி முறைகள் தொடக்கம் இன்று நவீன மீன்பிடி முறைகள் வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் மீன்பிடித்தொழிலுடன் தொடர்புடைய தொழில்சார் உபகரணங்களின் உற்பத்தி, உணவு பதனிடும் முறை ஆகிய சிறுகைத்தொழில்கள் பண்டைய பாரம்பரியங்களுடன் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. கடல்வளத்தினை விற்பனை செய்யும் சந்தை முதல் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கை வரை நகராட்சி மன்றம் சிறப்புமிக்க சேவையை ஆற்றி வருகின்றது. இப்பிரதேச மக்கள் பெரும்பாலானோர் புலம்பெயர்ந்துள்ள வேளையிலும் தற்பொழுது கிடைத்துள்ள கடல்வளத்தினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் நகராட்சி மன்றத்தின் இப்பணி சிறப்புற நடைபெறுகின்றது.

### கலாசார பாரம்பரியம்

வல்வெட்டித்துறை மக்களின் தெய்வீகச் சொத்து செல்வச் சந்நிதி ஆலயமாகும். இவ்வாலயத் திருவிழாவானது பண்டைக் காலங்களில் இலங்கையர் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் சிறப்புமிக்க திருவிழாவாகும். கதிர்காமத்தின் கிரியை முறைக்கு ஒப்பான கிரியை நடைமுறைகளைக் கொண்ட இவ்வாலயத்தின் திருவிழா காலம் மிகவும் ரம்மியமானது. அக்காலத்தில் இலட்சக் கணக்கில் கூடும் அடியார்களுக்கான சேவையினை நகராட்சி மன்றம் வழங்கிவருகின்றது. இந்த நல்ல பணியினை இலகுவாகவும் சிறப்பாகவும் எவ்வாறு மேற்கொள்கின்றோம் என்பதை உங்கள் முன் காட்சிப்படுத்துகின்றோம்.

### திண்மக்கழிவகற்றல்

நகராட்சியின் பிரதான பணிகளிலொன்று திண்மக் கழிவகற்றல் ஆகும். வல்வெட்டித்துறை நகர சபையானது கடந்த கால சூழ்நிலை காரணமாக திண்மக் கழிவகற்றலைத் திறம்பட மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டதாயினும் இன்று உரிய நிலைமைகளுக்கேற்ப திண்மக் கழிவினை Compose முறைப்படி பசளையாக்கி மீள் சுழற்சி முறைப் பயன்பாட்டிற்கு எம்மவர்களை அழைத்துச் செல்லும் சிறப்புமிக்க பணி தற்பொழுது ஆரம்பமாகின்றது. இதற்காக வல்வெட்டித்துறை நகர எல்லையில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணி ஆரம்பமாகின்றது.

### நகர திட்டமிடல்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகளுக்குட்பட்ட நகரம் எமது நகரம். இங்கு கடந்த கால சூழ்நிலைகளாலும் சுனாமி அனர்த்தத்தாலும் பல கட்டடங்கள் அழிவடைந்த நிலையிலுள்ளது. இன்று எம்மவர்கள் அவற்றைப் புனரமைக்கும் பணியில் இறங்கியுள்ளமையால் கட்டட அனுமதி என்பது மிகவும் அத்தியாவசியமான அங்கமாக விளங்குகின்றது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் வீடமைப்புத் திட்டங்களும் இப்பிரதேசத்தில் நடைமுறையிலுள்ளமையால் மேற்படி பணியானது சிறப்புற எம்மால் மேற்கொள்ளபபடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு பிரதேச சபை

### குடிதண்ணீர் உபயோகம்

எமது பிரதேசம் குடாநாட்டிலுள்ள பெரிய தீவுப் பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் மக்களின் குடிநீர்த் தேவையென்பது மிகவும் அவசியமான ஒரு தேவையாக உள்ளது. ஆயினும் பிரதேச குடிநீர் வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. எனவே மக்களின் சிக்கன பயன்பாடென்பது மிகவும் அவசியமானதாகும். எனவே இச்சேவையை சிறப்புற வழங்கும் எமது செயற்பாடுகளை உங்கள் முன் காட்சிப்படுத்துகின்றோம். மேலும் கால்நடைகள் எமது பிரதேசத்தில் கூடுதலாகக் காணப்படுவதால் அவற்றையும் அழிவிலிருந்து பாதுகாக்க அவற்றிற்கான குடிநீர் வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கழிவகற்றல்

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இன்றியமையாத ஒரு செயற்பாடு கழிவகற்றலாகும். இந்த வகையில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் எல்லைகள் கடல்களாக உள்ள பொழுதிலும் மக்கள் சாதாரண வாழ்கையை மேற்கொள்ள சிறந்த சுகாதார சேவைகள் எம்மால் வழங்கப்படுகின்றன. இச்சேவைகளை தங்கள் முன் காட்சிப்படுத்துகின்றோம்.

### கடல் உற்பத்திப் பொருட்கள்

நெடுந்தீவுப் பிரதேசத்தின் தனிச்சிறப்புமிக்க தொழில் கருவாடு உற்பத்தியாகும். எம்மவர்களால் பிடிக்கப்படும் மீன் வகைகள் உரிய காலத்தில் ஏனைய பிரதேசத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதில் வரும் இடர்கள் காரணமாக அவை எமது பிரதசத்தில் கருவாடாக மாற்றப்பட்டு ஏனைய பிரதேசத்திற்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ் உற்பத்தித் தேவைகளுக்கான உதவியினை எமது பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

### சுற்றுலா

கடந்த காலங்களில் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக எம்பிரதேசத்திற்கு மக்கள் சுற்றுலா வருவது குறைவடைந்திருந்த பொழுதிலும் இலங்கையர்கள் அனைவரும் உல்லாசமாக பொழுதைக் கழிக்க அழைக்கும் ஒரு பிரதேசம் எம் பிரதேசம். ஆகும். அழகிய கடற்கரைகள், வரலாற்றுப் பெருமை மிக்க சான்றுகள் அரசர்களின் நினைவுச் சின்னங்கள், இனிய அழகிய தென்னஞ்சோலைகள், குதிரைகளின் கூட்டங்கள் என எல்லோர் மனங்களையும் கொள்ளை கொள்ளும் எமது தீவின் உல்லாசப் பிரயாணிகளை வரவேற்கும் செயற்பாடு எம்மகத்தே உள்ளது. அத்துடன் சுற்றுலா மையங்களை உரிய முறையில் நாமே பேணி வருகின்றோம். இதுவும் எமது சிறந்த செயற்பாடுகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mannar District

### துமன்னார் நகர சபை

#### தூய்மையான நகரம்.

- ☐ தற்போது சபையால் நகரத்தில் இருநேர சுத்திகரிப்பு வேலை செய்யப்படுகிறது.
- ☐ நவீன பொதுச்சந்தை மீன் சந்தை என்பன காலைமுதல் மாலைவரை எமது சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களினால் சுத்திகரிப்பு வேலை மேற்கொள்ளப்படுகிறது.

- இனிவரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள ஆலோசனைகள்
  - ☐ பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதை தவிர்த்து சபையால் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கழிவுகள் கொட்டுவதற்கு ஆலோசனைகள் வழங்குதலும் இவற்றிற்கான ஊக்குவிப்புகள் வழங்குதலும்.
  - ☐ நடைபாதை வியாபாரத்தை முற்றாக தடுத்தல்

#### சிறுவர் பூங்கா

நகர சபை எல்லைக்குள் இரண்டு சிறுவர்களுக்கான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எமது சபையால் நிர்வகிக்கப்படும் ஒரு பூங்கா காணப்படுகிறது. இது சிறுவர்களின் விளையாட்டுக்கள், பொழுது போக்கு என்பவற்றிற்கு இடப்பற்றாக்குறையாக காணப்படுவதால் WORLD VISION நிறுவனத்தினரால் 4 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணியில் புதிய பூங்கா அமைக்கப்பட்டு எமக்கு வழங்க நடவடிக்கை மேற் கொண்டிருக்கின்றது.

#### வடிகால் அபிவிருத்தி

மன்னார் நகரத்தில் 2008ம் ஆண்டுக்கு முன்னர் ஒழுங்கான வடிகாலமைப்பு இல்லாதகாரணத்தினால் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கினர். அவை யாவன , போக்குவரத்துத்தடை, சுற்றாடல் பிரச்சினை , வெள்ளப்பெருக்கு , தொற்றுநோய் என பல்வேறுபட்ட பிரச்சினைகளை சந்தித்தனர்.மன்னார் நகரத்தில் நீண்ட காலமாக நிலவிக் கொண்டிருக்கும் வடிகால் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக 652 மில்லியன் செலவில் UNOPS நிறுவன உதவியுடன் பாரியளவிலான வடிகாலமைப்புத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது 12 பகுதிகளாக பிரிக்கப்பட்டு வேலைகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றது. மன்னார் நகரத்தின் தரைமட்டமும் , கடல் மட்டமும் கிட்டத்தட்ட சமமாக காணப்படுவதால் சில காலங்களில் கடல் நீர் தரைக்கு பெருக்கு எடுக்கும் நிலமையும் காணப்படுகின்றது.இதனால் இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக புதிய தொழிநுட்பங்களும் பிரயோகிக்கப்படுகின்றது.இதனூடாக நகரத்தில் சிறந்த வடிகாலமைப்பு இருப்பதுடன் வெள்ளப்பெருக்கு , தொற்றுநோய் ஆபத்தும் தவிர்கப்படும்.மேலும் இவ்வளவு காலமும் நகர சபை நிர்வாகத்தால் மாரிகாலங்களில் நீரை வெளியேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் தேவைப்பாடுகளும் இல்லாமல் போய்விடும்.இதனால் மன்னார் நகரத்தில் தேங்கும் வெள்ளநீரை கடலுடன் கலக்க ஏதுவாக அமைந்துள்ளது.இச்செயற்பணி 2010ம் ஆண்டு நிறைவடையும்.

#### திருக்கேதீஸ்வரம்

மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்னும் இடத்தில் அமைந்துள்ள இத்திருத்தலமானது பாடல் பெற்ற சிவாலயங்களில் ஒன்றாகும்இத்திருதலமானது ஒல்லாந்தர் காலங்களில் கட்டப்பட்டதாக வரலாற்று ஏடுகளில் காணப்படுகிறது.இதன் சிறப்பம்சம் பாலாவித் தீர்த்தமாகும்.

#### மடுக்கோவில்.

மன்னார் மாவட்டத்தில் மடு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள இத்திருத்தலமானது இலங்கையில் பிரசித்திப்பெற்ற கிறீஸ்தவ தலங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.இது இனமத வேறுபாடின்றி மக்களால் வழிபட்டு வரும் ஒரு வழிபாட்டுத்தலமாக திகழ்ந்து வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்குபாலம்.

இது மன்னாரில் சிறப்புவாய்ந்த சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இடமாக குஞ்சுக்குளம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

பெருக்கமரம்.

இலங்கையில் மிக அரிதாக காணப்படும் இம்மரங்கள் மன்னாரில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.இது பள்ளிமுனை என்னும் கிராமத்தில் காணப்படுகிறது.இதனது சுற்றளவு 19.51ஆ இ உயரம் 7.5 ஆ 1477ம் ஆண்டளவில் ஆரேபியர்களால் ஒட்டகத்தின் உணவுக்காக கொண்டுவரப்பட்ட இம்மரத்தின் பழங்களில் இருந்து விழுந்த விதைகளில் இருந்து இம்மரமானது உருவாகியிருக்கும் என நம்பப்படுகிறது.

மன்னார் தீவு.

இலங்கை வரைபடத்திலிருந்து வடக்குதிசையில் அமைந்திருக்கும் ஒரு தீவாக மன்னார் தீவு காணப்படுகிறது.இது இந்தியாவுக்கு அண்மித்த பகுதியாக காணப்படுவது இதனது சிறப்பம்சம்.இங்கு கிறீஸ்தவர்கள் , இந்துக்கள், முஸ்லீம்கள் ,சிங்களவர்கள் ஆகியோர் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

சிற்பியினால் செய்யப்பட்ட கலைப்பொருட்கள்

மன்னார் தீவானது கடலால் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பாகக் காணப்படுவதால் இங்கு ஜீவனோபாயத் தொழிலாக கடற்றொழிலே காணப்படுகிறது. எமக்கு அதிகமாக கடல் சார்ந்த பொருட்கள் கிடைப்பதனால் எமது மக்கள் சிறுகைத்தொழிலாக சிற்பியினால் செய்யப்பட்ட கலைப் ெருட்களை செய்கின்றனர்.

## மன்னார் பிரதேச சபை

கிராம நீர் விநியோகத்திட்டம்:-

மன்னார் பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளில் அத்தியாவசிய சேவையான நன் நீர் விநியோகத்திட்டம் மூலம் கிராம மக்கள் குடிநீர் பெறுவதில் ஏற்பட்ட சிரமம் தற்போது நிவர்த்தி செய்யப்படுகின்றது.

பனை வளம்:-

பனை மரம் மூலம் கிடைக்கப் பெறுகின்ற மூலவளங்களைக் கொண்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் உருவாக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது. இதன் மூலம் மக்களின் சுயதொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ளப்படுவதுடன் வள மேம்பாடும் பிரதிபலிக்கின்றது.

பிரஜைகள் பட்டயம்:-

இவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதன் மூலம் பொதுமக்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் பெற கூடிய சேவைகளையும் அச்சேவைகளை பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளையும் அதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் விபரங்களையும் இப்பட்டயம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானாட்டான் பிரதேச சபை

### சூழலைப் பாதுகாப்பதன் மூலம் சேவையை வழங்குதல்

சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவதும், சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து அதற்கு ஏற்ப மாற்று வழிகளை செயற்படுத்துவதும், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான பணியாக காணப்படுகின்றது.

சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுவதற்கு முன் தொழிற்சாலைகள, தொழில் நிலையங்கள, வேலைத் தளங்கள் என்பன அமைக்கப்பட்டு இருக்கும் சூழலை காணக்கூடியதாகவும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை அறியக்கூடியதாகவும் இருப்பது சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு முற்பட்ட நிலையான காணப்படுகின்றது.

சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்பட்ட பின்பு தொழிற்சாலைகள, தொழில் நிலையங்கள், வேலைத் தளங்கள் என்பன எவ்வாறு அமைக்கப்பட்டு இருக்கும் என்பதை காணக்கூடியதாகவும், இதன் மூலம் சூழல் மாசடையாத நிலையை அறிக்கூடியதாகவும் இருப்பது சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்பட்ட பின்பு இருக்கும் நிலையாக காணப்படுகின்றது.

இதன் மூலம் இச் செயற்பாடு தெரிவிக்கும் செய்தியானது சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், தொழிற்சாலைகள, தொழில் நிலையங்கள, வேலைத் தளங்கள் என்பனவற்றை மூடிவிடுவதை விடுத்து சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து சூழலை பாதுகாத்து தொழில் வளத்தை வழங்கக்கூடிய சேவையை வழங்குவதே ஆகும்.

இப் பிரதேச சபையால் உள்ளூராட்சி மாநாடு, கண்காட்சிக்கு காட்சிப்படுத்தக்கூடிய பொருட்களின் விபரம்

#### பனை வளம்:-

பனை மரம் மூலம் கிடைக்கப் பெறுகின்ற மூலவளங்களைக் கொண்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் உருவாக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது. இதன் மூலம் மக்களின் சுயதொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ளப்படுவதுடன் வள மேம்பாடும் பிரதிபலிக்கின்றது.

#### பிரஜைகள் பட்டயம்:-

இவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதன் மூலம் பொதுமக்கள் உள்;ராட்சி மன்றங்கள் மூலம் பெற கூடிய சேவைகளையும் அச்சேவைகளை பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளையும் அதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் விபரங்களையும் இப்பட்டயம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

01. அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பெறுபேறு, புகைப்படங்கள்
02. சூழல் பாதுகாப்பு தொடர்பான காட்சிப் பொருட்கள்
03. பிரதேச சபையின் முகப்பு

## மாந்தை மேற்கு பிரதேச சபை

மாந்தை மேற்கு பிரதேசசத்தின் எழுத்தாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்ட ஆக்கங்கள் புத்தக வடிவில் காட்சிப்படுத்தப்படும்.

மன்னார் மாவட்ட ஆயுர்வேத வைத்தியரினால் மன்னார் வளத்தில் சேகரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து வகைகள் காட்சிப்படுத்தப்படும்.

#### பிரஜைகள் பட்டயம்:-

இவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதன் மூலம் பொதுமக்கள் உளளூராட்சி மன்றங்கள் மூலம் பெற கூடிய சேவைகளையும் அச்சேவைகளை பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளையும் அதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் விபரங்களையும் இப்பட்டயம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முசலி பிரதேச சபை

### மீள்குடியேற்றம்:-

முசலி பிரதேசம் மன்னார் மாவட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட 40KM தூரத்தில் அமைந்துள்ளது. இது அனுராதபுரம், புத்தளம் மாவட்டங்களின் எல்லைகளை அண்மித்த பிரதேசமாகவும் உள்ளது இதன் ஒரு பகுதி கடலாலும் இன்னோரு பகுதி வனத்தாலும் சூழ்ந்து உள்ளது.

இப் பிரதேசம் கடந்த ஆண்டுகளில் இடம் பெற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து இடப்பெயர்வுக்கும் பாதிப்புக்களுக்கும் உட்பட்டு மீண்டும் தற்சமயம் துரிதமான முறையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது. இந்நிலையில் மக்கள் மீளவும் தங்கள் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு ஏதுவாக அத்திட்டங்களை முசலி பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது.

மேலும் உளள்ராட்சி மன்ற சேவைகளான குடிநீர், நூலகம், உளளூர் வீதிகள், போன்றன சிறப்புற இந்நிலை மேற் கொள்வதன் ஊடாக மக்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்க கூடியதாக இருப்பதுடன் உள்;ராட்சி மன்றங்களுக்கு எதிர்காலத்தில் தங்கள் வருமானங்களை அதிகரிப்பதனால் தொடர்ந்தும் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும்.

### பிரஜைகள் பட்டயம்:-

இவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதன் மூலம் பொதுமக்கள் உளளூராட்சி மன்றங்கள் மூலம் பெற கூடிய சேவைகளையும் அச்சேவைகளை பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளையும் அதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் விபரங்களையும் இப்பட்டயம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vavuniya District

வெண்கலச்செட்டிக்குளம்
பிரதேச சபை

அசாதாரண சூழ்நிலைகளில் கழிவகற்றல் சேவையை திறம்பட கையாளல்

எமது பிரதேச சபையானது மக்களின் பிறப்பு முதல் இறப்புவரையான தேவைகளை எமது வளங்களை உச்சமாக பயன்படுத்தி மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்கி தீருப்த்தி கண்டு வருகின்றது. அச் செயற்பாடுகளில் கழிவகற்றல், நீா்வழங்கள், வீதி, சுகாதாரம் தாய்சேய் நலம் மற்றும் ஏனையசெயற்பாடுகளை கூறலாம்.

எமது சபை நாட்டில் ஏற்ப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பெருந்திரளான மக்கள் எமது சிறு நிலப்பரப்பில் அமா்த்தப்பட்டதன்விளைவாக குறைந்த ஆளனி மற்றும் குறைந்த வளங்களை கொண்டு எதிா்கொண்ட பிரச்சனைகள், பிரச்சனையை கையாண்ட விதம், தற்போது எமது செயற்பாட்டை வெற்றிகரமாக எவ்வாறு எடுத்து செல்கின்றோம் என்பதே எமது காட்சிபடுத்தலின் பிரதான நோக்கமாகும்.

செறிவான மக்கள் சிறு நிலபரப்பில் குடியமா்த்தப்பட்டதன் விளைவாக பெறுமளவான கழிவுகள் வெளியேற்றப்பட்டது இதனால் மக்கள் பெறுமளவான சுகாதார பிரச்சனைக்கு ஆளாகினாா்கள். இதனை எமது சபையானது வெற்றிகரமா கையால்வதில் தடையாக குறைந்த ஆளனி மற்றும் குறைந்த வளங்கள் என்பன கானப்பட்டன.
இவற்றிலிருந்து மீள்வதற்கு பின்வரும் பிரச்சனைகள் பிரதான தடையாக கானப்பட்டன அவை.

- ☐ ஆளனி பற்றாக்குறை
- ☐ பொருத்தமான போக்குவரத்து சாதனங்கள் இன்மை (Gully Bowsar,Water Tank and Tractor etc)
- ☐ கழிவுகளை அப்புறபடுத்தும் இடம்
- ☐ சபையில் போதிய நிதிவசதி இன்மை.

இவற்றை பூா்த்தி செய்ய எமது சபையில் போதிய நிதி வசதி இல்லை. இருந்தும் நாங்கள் பொருத்தமான அரச நிறுவனங்களையும், அரசசாா்பற்ற நிறுவனங்களையும் தொடா்பு கொண்டு பின்வரும் முறையில் பிச்சனையை பூா்த்தி செய்து வெற்றி கண்டோம்.

- ☐ தற்காலிக அடிப்படையில் ஊழியா்களை வேலைக்கு அமா்த்தல்.
- ☐ பொருத்தமான போக்குவரத்து சாதனங்களை அரச, அரசசாா்பற்ற நிறுவனங்களிடமும் மற்றும் வாடகை அடிப்படையில் தனியாரிடமும் பெற்றுக்கொண்டோம் (Gully Bowsar,Water Tank and Tractor etc...)
- ☐ கழிவுகளை சேமிக் இடத்தை தெரிவு செய்து சுற்றுபுற சூழலில் கிறுமிகள் பறவாமல் கொட்டுதல்.
- ☐ இவ்வனைத்து வேளைபுளையும் மேற்க்ககொள்ள உதாரனமாக ஊழியா்களுக்கான சம்பளம், எரிபொருள் செலவு. புராமரிப்பு செலவு மற்றும் ஏனைய செலவுகளை வழங்க தேவையான நிதியை வேறு அரசசாா்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றோம்.
- ☐ உரிய துறைகளில் நிபுனத்துவம் பெற்றவா்களிடம் ஆலோசனைகளையும், அறிவுறைகளையும் பெற்றோம்.
- ☐ இவற்றினால் எதிா்காலத்தில் ஏற்ப்படக் கூடிய பிரச்சனைகயை கருத்தில் கொண்டு சிறந்த முறையில் திட்டங்களை வகுத்தோம்.

இதன் மூலம் இச் செயற்பாடு தெரிவிக்கும் செய்தியானது. இது போன்றதொரு நிலமையில் அனைத்து நிறுவனங்களும் தங்களை எவ்வாறு தயாா்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

1 கைப்பணி பொருட்கள்
2 இடம் பெயா் நலன்புரி முகாம்களும் அவற்றுக்கு சேவை வழங்களின் காட்சித்தல்கள்
3 கைத்தொழில் உற்பத்தி பொருட்கள்
4 சுதேச மருத்துவமும் உள்ளுராட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

அரச அரசசார்பற்ற நிறுவனங்களினூடான சேர்ந்தியங்கலும் மக்கள் பங்களிப்பு செயற்பாட்டுடன் சிறந்த உள்ளூராட்சி சூழலை உருவாக்குதல்

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நல்லுறவாக சேர்ந்தியங்குவதன் மூலம் மக்கள் பங்களிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் ஊடாக பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்தி பிரதேச வாழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி சிறந்த உள்ளூராட்சி சூழலை உருவாக்குதல் முதற்பணியாகும்.

இந்தவகையில், உள்ளூராட்சியின் தனித்துவத்தையும் செயற்பாடுகளையும் வெளிக்காட்டவும், அவ்வாறானவற்றின் முக்கியத்துவத்தினை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும் அவற்றின்பால் கவனமீர்க்கப்படவும் கீழ்வருமாறு காட்சிப்படுத்தப்படுகின்றன.

01. 1ம் கண்காட்சிக் கூடம்

a.பிரதேச சபையின் முகப்பு

b.சேர்ந்தியங்கல் செயற்பாடுகள்

i. அரச சார்பற்ற நிறுவனங்கள்

வீட்டுத்திட்டங்கள், விதி அபிவிருத்திகள், நீர் விநியோகத்திட்டங்கள்
கிராமிய கடன் திட்டம்

ii. அரச நிறுவனங்கள்

சுகாதார செயற்பாடுகள், இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான செயற்பாடுகள்

c. உள்;ராட்சியும் மாதிரி அமைப்புக்களும்

i. அலுவலக மாதிரி தோற்றம்

ii. நூலக மாதிரி தோற்றம்

iii. மாதிரிக் கிராமம்

d. பூரணத்துவமான அரிசி ஆலையின் மாதிரி

e. ஆலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம்

f. சபையின் சிறந்த செயற்பாடுகள்

i. மயான நினைவுத்தூபிகளுக்கு பதிலாக சுற்றுமதில்

ii. இயந்திரோபகரண கடனை அதன் ஈட்டல் வருமானத்தின் மூலம் மீளளித்தல்

iii. அரச சார்பற்ற நிறுவனங்களுடான செயற்பாட்டு நடவடிக்கைகள்.

iv. சமூக வலுவூட்டாளர்களுடான செயற்பாடுகள்

01. 2ம் கண்காட்சிக் கூடம்

a. அருகிப் போன பாவனைப் பொருட்கள்

b. வன்னியின் விசேட விளைபொருட்கள்

c. ஆயுள்வேத மருத்துவமும் அதன் விளக்கமும்

d. எமது பிரதேச சபை எல்லையில் உற்பத்தியாக்கப்படும் கைத்தொழில்சார் உற்பத்திகள்

## வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை

உள்ளூராட்சி திணைக்கள கண்காட்சி

எமது சபையினால் கீழ்வரும் பொருட்கள் இக்கண்காட்சிக்கு கொண்டு செல்வதற்காக தயார்ப்படுத்தியுள்ளோம்.

01. நவீன குழாய் கிணறு
02. மழை நீரைச் சேமித்து குடிநீராக மாற்றும் முறை
03. ஆதிகால விவசாயியின் உருவமைப்பு
04. சிங்கள கலாச்சார பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Urban Council
## Vavuniya

**Symposium northern provincial 2009**

Vavuniya urban Council Staff involved in the symposium in the following field

1. Preparation of Compost from Vegetable waste. We are collecting Vegetable waste at market daily and preparing compost. This compost is used as natural fertilizers. Most of the home gardeners are using that We maintaining. We are explaining the methods to prepare this compost.

2. Peace, Prosperity and social harmony through library services, Our library is doing a service of above though our activity we are showing this by a modal creation from waste

3. Local product in urban council area we have collected a number of items which wear prepared manually

4. A modal showing the natural beauty of the U.C tank and paddy field

5. A modal Showing the future of new development of various project that wear identified with the Consultations and people participation

6. Collection of photo graphs of our activities, development of education, sports, cultural and environment etc.

I wish to extend a warm welcome to the distinguished participation guests of the symposium and wish them a Fruitful and enjoyable time.

## 6. Resource Guide for Technical session

•

## Legal Reform Process

### உள்ளூராட்சி சட்ட மறுசீராக்கல்கள்

பின்புலம்:

உள்ளூராட்சி முறைமையானது இலங்கையில் சனநாயக ஆட்சியில் ஒரு முக்கியமான இடத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், அரசியலமைப்பின் கீழ் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி வெறுமனே சட்டவாக்கங்களின் மூலமே இதன் செயற்பாடு தொடர்ந்து வந்திருக்கின்றது.

கடந்த காலத்தில் முகம் கொடுத்த மாறிவரும் சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப நிலைமைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாறான சட்டங்கள் இற்றைப்படுத்தப் படவில்லை. எனவே, தற்போதுள்ள வழக்கொழிந்த சட்டக் கட்டமைப்பிலுள்ள ஏற்பாடுகளைப் பற்றி மீளச் சிந்திப்பதற்கு இது காரணமாக அமைகின்றது.

பிரச்சினை

உள்ளூராட்சி முறைமையானது பிரதான உள்ளூராட்சிச் சட்டங்களின் கீழ் செயற்பட்டு வருகின்றது. (அதாவது: 1947 ஆம் அண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டம், 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்) இந்தச் சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளூராட்சி அமைப்புக்களானவை துணை விதிகளினை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளன. எவ்வாறாயினும், ஒட்டுமொத்த உள்ளூராட்சித் துறையும் போதிய அளவான துணை விதித்தொகுதியினால் பலப்படுத்தப்படவில்லை என்பது கவனமான மதிப்பீடுகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இது ஒரு பாரதூரமான இடைவெளியாகும். உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயன்முறையில், இதனை முன்னுரிமை அடிப்படையில் தீர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு

உள்ளூராட்சி மறுசீரமைப்பின் போது கருத்தில் கொள்வதற்காக நான்கு முக்கியமான பரப்புக்களை உள்ளூராட்சி , மாகாண சபைகள் அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. அவை பின்வருபவைகளாகும்.

1. தேசிய மற்றும் மாகாண அரசாங்கத்திற்கு அடுத்த மட்டத்திலே உள்ளூராட்சியை ஒன்றிணைக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்துதல்.

2. உள்ளூராட்சியின் பிரதான சட்டங்களிற்குத் தேவையான மாற்றங்களை மீளாய்வு செய்தல், இற்றைப்படுத்தல் மற்றும் அறிமுகம் செய்தல்.
- மாநகரசபைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 252)
- நகரசபைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 256)
- 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்.

3. உள்ளூராட்சித் தேர்தல் கட்டளைச் சட்டம், வீதவரி அறவிடல் மற்றும் வரிமதிப்பீட்டுக் கட்டளைச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களிற்கும் தேவையான மாற்றங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்தல்.

4. துணை விதிகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றிற்காகவும் நடைமுறைச் சாத்தியமிக்கதும் தர்க்க ரீதியானதுமான செயல்விதிகளை அறிமுகப்படுத்துதல்.

அறிமுகப்படுத்தல் உபாயமார்க்கங்கள்

நாட்டின் தற்போதைய அபிவிருத்தித் தேவைகளுக்கு அமைய பிரதான சட்டங்களை இற்றைப்படுத்துமுகமாக அதில் மாற்றங்களைக் கொண்டுவர அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. உள்ளூராட்சி முறைமை மற்றும் கட்டமைப்பிற்கான மாற்றங்கள்
-குழு முறைமை: வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்பு மற்றும் உள்ளடக்கும் தன்மை ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதற்காக சிவில் சமூகப் பங்கேற்பை உள்ளடக்குகின்ற நிலையியற் குழு மற்றும் ஆலோசனைக் குழு எனும் இரண்டு வகைக் குழுக்கள்.

பங்கேற்புமிகு திட்டமிடல் முறைமையை மேம்படுத்துதல். கூட்டுப்பங்காண்மைத் திட்டம், நடுத்தவனைத் திட்டம் மற்றும் வருடாந்தத் திட்டம்

- பங்கேற்புமிகு முறையிலான வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு.
- உள்ளூராட்சி விவகாரங்களில் சிவில் சமூகத்தின் நேரடி இணைப்பு.
- புதிய செயற்பாட்டுப் பரப்புக்களை ஒருங்கிணைத்தல்.

திட்டமிடல்
- சூழல்
- சுதேச வைத்தியத்தினை மேம்படுத்தல்.

2. தற்போதைய சேவை மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தித் தேவைப்பாடுகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையில் இறைவரி மற்றும் நிதி தொடர்பான சட்ட ஏற்பாடுகளை இற்றைப்படுத்தல். உதா: வரி, வீதவரி, குற்றப்பணம்.

3. உள்ளூராட்சிச் சட்டவாக்கங்களின் கீழ் குற்றம் சாட்டப்படுபவர்களின் குற்றப்பணத்தினை அதிகரித்தல். மேலும், சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையினால் அடையாளம் காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் சட்டங்களை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

- ☐ வீதவரி மற்றும் பெறுமதி மதிப்பீடு கட்டளைச்சட்டம்
- ☐ ஊண்வினைஞர் கட்டளைச்சட்டம்
- ☐ களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்
- ☐ பொது நிகழ்த்துகை கட்டளைச்சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Introduction to Local Government Legal Reforms

By. Mr. D.P. Hettiarachchi, Additional Secretary,
Ministry of Local Government and Provincial Councils.

Contents:

1. The background of Legal Reforms.
2. Nature of Legal Reforms.
3. Scope of Legal Reforms.
4. Why Legal Reforms are needed.
5. Legal Reforms related to major areas.
6. Strategy for implementing Legal Reforms.

## 1. The background of Legal Reforms

The Commission of Inquiry on Local Government Reforms was appointed by Her Excellency the President of Sri Lanka on 12th February 1998.

In terms of the warrant issued to the commission the subjects assigned to inquire and report were on the following matters;

(a) The existing system of local government, the defects and shortcomings in that system, and the reforms required to remedy such defects and shortcomings;

(b) The amendments necessary to be made to the existing laws relating to local government in order to have an effective legislative structure to ensure good governance at the local authority level with special reference to Municipal Councils, Urban Councils and Pradeshiya Sabhas;

(c) The reforms necessary to be made to the existing laws and regulations relating to local government to ensure a uniform system of law applicable to the entire country;

(d) The existing laws relating to local authority elections and the reforms needed to ensure effective representations of the peoples of the respective areas of authority of local bodies;

(e) The measures necessary to ensure effective control by the Central Government over local authorities and their activities in order to ensure an effective system that would meet the needs of the people;

Out of above five matters, b, c and d were directly related to local government legal reforms.Therefore, it is clear that 1998 local government reforms recommendations were mainly based on the local government legal reforms.

## 2. Nature of Legal reforms

It is not a complete or overall legal reforms but;

I. More or less reforms to the existing legal provisions by updating them to suit the current needs of the sector.

II. By making additional provisions to accommodate current socio-economic and environmental issues.

III. To expend the functional domain of Local Government.
eg.: i. Planning ii. Economic activities

IV. Such Legal Reforms needed for the implementation of reforms relating to capacity building in the areas of council affairs, Accounting System, anagement, Planning, Environment and Service Delivery of Local Authorities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Scope of Legal Reforms

I. Constitution/Supreme law

II. Governing legislations/enabling laws/ main laws.

III. Other relevant laws

IV. Subsidiary legislations.

V. There is an acute need to amend and update the existing laws, rules, regulations and by-laws.

eg. :
- Council Meeting Procedure
- Committee System/Participation
- Planning
- Budgetary procedure
- Accounting System (Financial and Management rules etc.)

VI. These reforms were based mainly on recommendations made by the Presidential Commission of Inquiries on Local Government Reforms in 1998.

VII. The draft amendments on governing legislations have been given as annextures to the Commission report.

## Why legal reforms are needed

- For the last 50 years/after independence no comprehensive and systematic legal reforms have been undertaken. There have been only some ad-hoc amendments from time to time.

- This is for the 1st time in the history of Sri Lanka that a comprehensive and systematic approach has been effected to the local government legal reforms.

- Because no such initiative took place for a long period the local government law was stagnating in the presence of the changing circumstances in the country.

- As a result the local government system was lagging behind while other sectors were keeping pace with the emerging trends of the society.

- The local government reforms commission has made recommendations to expand the role of local government sector as the third tier of governance in the country.

- Due to the existing outdated legal system Local Authorities were facing severe difficulties with regard to the resource mobilization, particularly to the financial resources.

  eg. i License fees for a bicycle is Rs. 4/= even at present.
  ii Business License max Rs.3000/-in UC & PSA.

## Legal reforms related to major areas.

i. Supreme law/Constitution

Recognition of local government as the third tier of government by incorporating local government in the constitution as a separate chapter as in India.

eg.: i. This recommendation has been already accepted by the government.

ii. Governing legislations

MCO. UCO and PSA

- As far as possible uniformity in contents to be maintained.
  eg. : Committee System
- Updating the provisions relating to finances.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

eg.: Taxes, Fees and Penalties Land tax will be introduced in place
of Acreage tax in PSS.
Capital Value will be introduced in place of annual value.

iii. Number of amendments proposed

| | | |
|---|---|---|
| MCO | - | 101 |
| UCO | - | 71 |
| PSA | - | 73 |

- Incorporation of new functional areas.
  eg.
  i. Planning
  ii. Environment
  iii. Promotion of Indigenous Medicine
  iv. Public Utility Service and Community Services.

VI.Other legislations
Updating almost all laws relating to local government revenues.
eg. : i. Rating and valuation Ordinance
ii. Butchers Ordinance
iii. Entertainment tax Ordinance.
iv. Public Performance Ordinance.

V. Amendments to local government elections Ordinance, re-introducing the ward system.

I. Amendments to Health related laws :
eg.
- Food Act
- Rabies Ordinance
- Nuisance Ordinance

II. Subsidiary legislations

Following issues are to be addressed;
- Subjects for which by-laws can be framed are to be expanded.
- Subjects for which there are no by-laws at present need new by-laws.
- Existing by-laws need to be up dated.
- Preparation of model by-laws and refer them to provinces for enactment.

**Strategy for implementing legal reforms**

- Legal reforms will beintroduced by the Ministry of Local Government and Provincial Councils with wider participation of Provincial and Local Authorities and with the concurrence of the legal draftsman.

- Constitutional amendments :
This matter has been already intimated to the Ministry of Constitutional affairs.

- Governing Legislations and Other Legislations.
Legal unit of the Ministry has been identified these amendments and referred to the Cabinet of Ministers.Cabinet has given the approval to refer them to legal draftsman for enacting.

- Subsidiary Legislations
Conducted a detail study/need assessment with regard to the reforms of subsidiary legislations such as;
  - By-laws
  - Rules
  - Regulations

For this exercise active participation of provincial councils and local authorities are essential.
Provincial level legal reform implementation units are being established at present by the Ministry of Local Government & Provincial Councils for this purpose.
Implementation of Local Government Reform Circular in Northern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்கள்

திருமதி ஆர். விஜயலட்சுமி,
செயலாளர்,
மாகாண உள்ளூராட்சி அமைச்சு,
வட மாகானம்

## பின்புலம்

உள்ளூராடசி நிறுவனங்களின் இயலுமையை வலுப்படுத்துதல் அதன் விடயப்பரப்பை விரிவாக்குதல் மற்றும் மக்கள் பங்கேற்பினை விருத்தி செய்தல் தொடர்பான மறுசீரமைப்புக்கள் உள்ளூராட்சியில் அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இதன் நடைமுறையினை இலகுபடுத்தும் வகையில் அரசினால் உள்ளூராட்சி மறுசீரமைப்பு பற்றிய 13 சுற்றறிக்கைகள் ஒன்றுதிரட்டி வெளியிடப்பட்டுள்ளன.

இந்த மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவது உள்ளூராட்சி நிறுவனங்களின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதனை கருத்திற்கொண்டு இவை சகல உள்ளூராட்சி நிறுவனங்களாலும் செயற்படுத்தப்பட்டன.

வடமாகாணத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக தெரிவு செய்யப்பட்ட சபைகள் இல்லாமல் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருந்தன. மேலும் உள்ளூராட்சி கட்டுமாணங்கள் பாரிய பாதிப்பிற்குள்ளாகி காணப்பட்டன. எனினும் வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் இம்மறுசீரமைப்புக்கள் பல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## பிரச்சனைகள்

1. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேவையான நிதி, பயிற்றப்பட்ட ஆளணியினர் மற்றும் உட்கட்டுமான வசதிகள் என்பன தேவையான அளவு கிடைக்கப்பெறாமை.

2. உள்ளூராட்சி நிறுவனங்கள் சிறப்பாக செயற்பட வேண்டுமாக இருந்தால் உள்ளூராட்சி நிறுவனங்களைத் தவிர ஏனைய மாகாண சபை திணைக்களங்களும் மத்திய அரசின் பிரதேச செயலகங்களும் இணைந்து செயற்பட வேண்டிய தேவை உணரப்பட்டது.

3. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அமைப்பு முறைமைகள் மற்றும் செயல்முறைகள் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கான சூழ்நிலை காணப்படாமை. மாறிவரும் உலக நடைமுறைக்கேற்ப புதிய முகாமைத்துவ நுட்பங்களும் சட்டத் திருத்தங்களும் உள்வாங்கப்படாமை.

## தீர்வு

01. அவை நடவடிக்கைகள்

- ☐ உள்ளூராட்சி மன்றங்களின் குறித்துரைக்கப்பட்ட நிலையியற்குழுக்களை மீளவும் கட்டியெழுப்புதல் வேண்டும்.
- ☐ தேவையான சந்தர்ப்பங்களில் உப விதிகள் துணை விதிகள் என்பவற்றினை மாற்றியமைப்பதற்கு சபை அங்கத்தவர்கள் ஊக்கமளித்தல் வேண்டும்.

**02. முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்**

- ☐ உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் மக்கள் மயப்படுத்தப்படுதல் வேண்டும்.
- ☐ தனியார் முகாமைத்துவ முறைமைகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் உள்வாங்குவதுடன் சகல உள்ளூராட்சி அலுவலர்களுக்கும் சமச்சீரான தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்
- ☐ உள்ளூராட்சி மன்றங்களிற்கு இடையே ஒழுங்குபடுத்தப்பட்ட இடமாற்றக்கொள்கை பின்பற்றப்படல் வேண்டும்.

**03. பௌதிக திட்டமிடல்.**

- ☐ தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் ஒருங்கிணைக்கப்பட்ட பௌதிக திட்டங்களை திட்டமிடுவது முதல் நடைமுறைப்படுத்துவது வரையிலான ஏனைய நிறுவனங்களின் பங்களிப்பினை பெறுதல்.
- ☐ பிரதேச மட்டத்திலான வலயமாக்குதல் மற்றும் கட்டுமாண திட்டங்களை தயாரிக்கும்போது நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நாடு நகர அபிவிருத்தி திட்டமிடல் அதிகார சபையின் பங்களிப்பினை பெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வீதிகளும் வடிகாலமைப்பும்

- ☐ மக்கள் பங்களிப்புடன் வெளிப்படை தன்மையுடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்

05. கட்டுமாணமும் பராமரிப்பும்

- ☐ தேவைகளின் அடிப்படையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையிலும செயற்பாடுகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

06. பொது சுகாதாரம்

- ☐ பொது சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை முறையாக வழங்குதலும் அதன் தொடர்ச்சியான விளைதிறனை உறுதிப்படுத்துதலும்.

07. சுற்றாடல் பாதுகாப்பு

- ☐ சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சட்டங்களை துணை விதிகளுக்கூடாக உள்வாங்கி சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன் அதன் அழகையும் தூய்மையையும் பாதுகாத்தல்

08. பொதுப்பயன்பாடு

- ☐ மக்களுக்கு தேவையான பொதுப்பயன்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப அறிவினையுடைய வளங்களை விருத்தி செய்தல் வேண்டும்.

09. மக்களின் பங்களிப்பும் சமூக அபிவிருத்தியும்

- ☐ ஏற்கனவே உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக கிராம ரீதியான மக்கள் பங்களிப்பை பெறுவதற்கான சபைகளை வலுப்படுத்தலும் அதன்மூலம் கீழிருந்து மேல்நோக்கிய திட்டமிடலை ஊக்கப்படுத்தலும்

10. சமூக சேவைகளை நடைமுறைப்படுத்தல்

- ☐ நற்பிரசைகளை உருவாக்குவதன் பொருட்டு அறிவுசார் மற்றும் நல்வழிப்படுத்தலுக்கான சேவைகளை மேம்படுத்தி சமூகத்திற்கு வழங்குதல்

11. பொருளாதார நடவடிக்கைகள்

- ☐ மக்களின் அடிப்படை பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு உதவி செய்தல்

12. சுதேச மருத்துவத்தை மேம்படுத்தல்

- ☐ எமது பாரம்பரிய மருத்துவ முறைகளையும் பயனுள்ள மூலிகை வகைகளையும் பாதுகாத்தலும் இதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

அறிமுகப்படுத்தல் உபாயங்கள்ா

1. மக்களிடையேயும் மற்றும் அக்கறையுடைய தரப்பினரிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
2. மக்களிடையேயும் மற்றும் அக்கறையுடைய தரப்பினரிடையேயும் வலுவூட்டலுக்கான பயிற்சிகளை வழங்குதல்.
3. தொடர்பாடல் மற்றும் ஒழுங்கிணைப்பு பொறிமுறைகளை சகல அக்கறையுடைய தரப்பினருடனும் பேணுதல் வேண்டும்.
4. தேவைப்படும் சட்டங்கள், விதிகள், உபவிதிகளை உருவாக்கும் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.
5. பொதுமக்கள் பங்களிப்பிற்கான பொறிமுறை நுட்பங்களை விருத்தி செய்தல்
6. நவீன முகாமைத்துவ உத்திகளை கையாளுதல்.
7. உட்கட்டுமான செயற்றிட்டங்களில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் அதற்கான ஆளணியினரை வலுப்படுத்தலும்
8. மேற்கூறிய செயற்பாடுகளில் நிலைத்திடு தன்மையை பேணுவதற்கான சிறந்த கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
9. ஆராய்ச்சி மூலம் பெறப்படும் முடிவுகளில் இருந்து பெறப்படும் அனுபவங்களின் மூலம் உள்ளூராட்சி செயற்பாடுகளை தொடர்சியான மீளாய்விற்கு உட்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ·Over view of National Local Government Policy

### உள்ளூராட்சி பற்றிய வரைபுத் தேசியக் கொள்கையின் சுருக்கம்

பிரதான கூறுகள்

கொள்கையின் பின்புலம்:

சனநாயக ஆட்சியினை மேம்படுத்துவது என்பது எந்தவொரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தினதும் பிரதான சவாலாகும். இச்செயன்முறையில், உள்ளூராட்சி ஒரு முக்கியமான பாத்திரத்தினை வகிக்கின்றது. அவை சுயாட்சியின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர் கட்டமைப்பாகும். அவற்றினால் தேசிய அபிவிருத்திக்கும் பெரும் பங்களிப்பு வழங்க முடியும். அரசியலமைப்பின் மூலமாக ஏற்படுத்தப்படும் மாற்றீட்டினாலும், நிறுவன ரீதியான வலுவூட்டலினாலும் உருவாக்கப்படும் புதிய ஊக்கிக்காக நாட்டிலுள்ள 330 உள்ளூராட்சி நிறுவனங்கள் நீண்ட காலமாகக் காத்திருக்கின்றன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பானது அதன் அரச கொள்கையின் கோட்பாடுகளில் பின்வரும் வாக்குறுதியை வழங்குகின்றது.

நிர்வாகத்தினைப் பன்முகப்படுத்துவதன் மூலமும், தேசிய வாழ்க்கை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் ஒவ்வொரு மட்டத்திலும் மக்கள் பங்குபற்றுவதற்கு அவர்களுக்கு சாத்தியமான அனைத்து வாய்ப்புக்களையும் வழங்குவதன் மூலமும் அரசாங்கத்தின் சனநாயகக் கட்டமைப்பினையும் மக்களின் சனநாயக உரிமைகளையும் வலுப்படுத்தி பரந்ததாக ஆக்குவது.

மனித இருப்பிடங்களின் சகல உள்;ர் அலகுகளும் நவீன ரீதியில் வளர்ச்சி அடைவதற்கான ஒரு சிற்றின மையமாக உருவெடுக்க வேண்டும் என்பதே இலங்கையின் விருப்பமாகும்.

கொள்கையின் நோக்கம்:

உள்ளூராட்சியின் பாத்திரம், கட்டமைப்பு மற்றும் செயற்பாடு ஆகியவற்றினை பலப்படுத்துவதற்கு நடுத்தர மற்றும் குறுகிய கால மாற்றங்களின் தொடரினை உருவாக்குவதே உத்தேசிக்கப்பட்டுள்ள தேசியக் கொள்கையின் நோக்கமாகும். உள்ளூராட்சியானது ஒரு பணித்துறை முகாமையாளர் என்ற நிலையில் இருந்து உள்ளூர் அபிவிருத்தியின் ஒரு நேயமிகு வசதிப்படுத்துனர் மற்றும் தீவிர பங்காளர் எனும் நிலைக்கு மாறுவதற்காக அதன் பாத்திரம் மற்றும் செயற்பாடுகளில் ஒரு நெறி உதாரண மாற்றத்தினையே அது முன்மொழிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொள்கையின் நோக்கம்:

உள்ளூராட்சியின் பாத்திரம், கட்டமைப்பு மற்றும் செயற்பாடு ஆகியவற்றினை பலப்படுத்துவதற்கு நடுத்தர மற்றும் குறுகிய கால மாற்றங்களின் தொடரினை உருவாக்குவதே உத்தேசிக்கப்பட்டுள்ள தேசியக் கொள்கையின் நோக்கமாகும். உள்ளூராட்சியானது ஒரு பணித்துறை முகாமையாளர் என்ற நிலையில் இருந்து உள்ளூர் அபிவிருத்தியின் ஒரு நேயமிகு வசதிப்படுத்துனர் மற்றும் தீவிர பங்காளர் எனும் நிலைக்கு மாறுவதற்காக அதன் பாத்திரம் மற்றும் செயற்பாடுகளில் ஒரு நெறி உதாரண மாற்றத்தினையே அது முன்மொழிகின்றது.

இக்கொள்கையின் ஒட்டுமொத்த நடுத்தரக் காலக் குறிக்கோள் என்னவெனில், உள்ளூர் அதிகார சபைகளை நாட்டின் பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் இன்றியமையாத அங்கமாக மாற்றுவதேயாகும். பின்வருவனவற்றிற்காக, அதிகாரம் மற்றும் வளங்களினால் ஆதாரப்படுத்தப்பட்ட, ஆகக் கூடிய அனுமதிக்கப்பட்ட மட்டத்திலான சனநாயக பன்முகப் படுத்தலையும் தன்னாட்சியையும் வழங்குவதையே அது உத்தேசிக்கின்றது.

a) உள்ளூராட்சியின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவது.

b) உள்ளூர் அதிகார சபைகளின் மற்றும் அவற்றின் சிவில் சமூகப்பங்காளர்களின் பிரக்ஞை, தொலைநோக்கு, அர்ப்பணிப்பு, திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ ஆற்றல் ஆகியவற்றை அதிகரித்தல்

c) உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களை அவை பூரணமாகப் பயன்படுத்திப் பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் பலங்கள் மற்றும் வளங்களை உச்சபட்சமாகப் பெற்றுக் கொள்ளவும், அதன் மூலம் பங்கீடுபாட்டாளர்கள் பிரதேசத்தின் தனித்துவமான கலாசார சூழல் மற்றும் சுற்றாடலினுள் பௌதீக மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தியினில் பங்கெடுக்கவும் வேண்டி உள்ளூர் அதிகார சபைகளை பலப்படுத்தல். இதனால், இலங்கையின் உள்ளூராட்சியை மிகுந்த செயற்திறன் மிக்கதாகவும், பிரசைகள் நேயமுடையதாகவும், சனநாயக ஆட்சியின் ஒப்புரவு உருவாக்க நிறுவனமாகவும் மாற்றுவதையே கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### உபாய மார்க்கமும் கொள்கையின் கவனக்குவிப்பும்

உள்ளூராட்சியில் நிலவுகின்ற பற்றாக்குறை, தடைகள் மற்றும் நடப்புச் சவால்களுக்கு தீர்வாக கொள்கையானது நடைமுறைச் சாத்தியமிக்க பொருத்தமான தீர்வுகளை முன்வைக்கும். செயற்திறன்மிகு உள்ளூர் சுயாட்சியின் யுகத்திற்கு அழைப்பு விடுப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் நிறுவன ரீதியான வழிமுறை அமைப்புக்கள், சாதனங்கள் மற்றும் கருவிகள் உரிய முறையில் இருக்கின்றன என்பதை அது நிச்சயப்படுத்தும். இதற்காக சமூக நல்லுறவு, ஒருங்கிசைவு மற்றும் இன ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிசெய்கின்ற பன்முகங்கொண்ட உபாயம் ஒன்றை அது பயன்படுத்தும். உபாயமானது, (i) உச்சபட்ச பன்முகப்படுத்தல் மற்றும் பரவலாக்கல் (ii) இயலுமான சூழல் மற்றும் கருத்தொருமித்த அரசியலினை அதிகரித்தல் (iii) மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத் தன்மை, வகைப்பொறுப்பு மற்றும் பதிற்செயற்பாட்டுத் தன்மை (iv) ஒப்புரவு மேம்பாடு மற்றும் வறுமைக் குறைப்பு (v) அதிகரிக்கப்பட்ட சமூக உள்ளடக்கும் தன்மை, பங்கேற்பு மற்றும் பங்காண்மை (vi) முகாமைத்துவ நேர்த்தி ஆகியவற்றை உள்ளடக்கும்.

### கொள்கை உருவாக்கச் செயன்முறை

உள்ளூராட்சி பற்றிய தேசியக் கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு உள்ளூராட்சித் துறையிலுள்ள முன்னணிச் செயற்படுனர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் வெளிப்படையான கலந்துரையாடலை நடத்துவதற்காக பூர்வாங்க வரைபு ஒன்றைத் தயாரிக்க முன்வந்துள்ளது. உள்ளூராட்சி பற்றிய கொள்கைப் பிரகடனமானது உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் 2007 ஜூலையில் மேற்கொள்ளப்பட்டது. பிரகடனமானது தகவலுக்காக அமைச்சர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மாகாண, உள்ளூர் மற்றும் தேசிய மட்ட பங்காளர்கள், தனியார் துறை உள்ளிட்ட சிவில் சமூகம் உள்ளிட்ட உள்ளூராட்சியில் ஆர்வம் கொண்ட பல்வேறு அக்கறையுள்ள தரப்பினருடன் பல தொடரான கலந்துரையாடல்களும் ஆலோசிப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கொள்கையானது, பாராளுமன்றத்தின் இறுதி அங்கீகாரத்தினைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக, அமைச்சர்களின் உடன்பாட்டினைப் பெறுவதற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### கொள்கையின் ஒட்டுமொத்த நன்மை

கொள்கையினூடாக அரசாங்கமானது உள்ளூர் அதிகார சபைகள் மத்தியில் பல்வேறு மட்டங்களில் ஒரு புதிய போட்டி மனப்பாங்கினை உருவாக்க எண்ணியுள்ளது. இது செயற்திறனை மேம்படுத்த உதவுவதுடன் இந்த முக்கியமான நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்கவும் உதவும்.

உள்ளூராட்சியினை தொலைநோக்குடைய ஓர் அரசியல் சக்தியாக மாற்றுவதற்கும், சமூக பொருளாதார மாற்றம் மற்றும் துரித பிராந்திய அபிவிருத்தி ஆகியவற்றிற்கான ஒரு சக்திமிக்க நிர்வாகச் செயலணியாக மாற்றுவதற்கும் கொள்கையானது அதன் நோக்கம் மற்றும் அணுகுமுறைகளை எடுத்தியம்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியும் சுய ஆட்சி அரசாங்கங்கங்களும்



திரு. எஸ்.ரங்கராஜா,
மேன் மிகு ஆளுனரிற்கான செயலாளர், வட மாகானம்.

மனித வரலாற்றில் வெவ்வேறு சமூகங்கள் அவரவர்களின் பக்குவத்திற்கும் வளர்ச்சி நிலைமைகளுக்குமேற்ப தத்தமக்குமுரிய ஆட்சி முறைமையினை உருவாக்கி வந்துள்ளன. ஆதிகால சமூகத்தில் அவர்களது மிகமுக்கிய தேவையான பாதுகாப்பு, உணவு, மற்றும் வாழ்விடம், ஆகியவற்றை அடைந்து கொள்வதற்கு குடும்பத்தலைவன், குழுமங்களின் தலைவர்கள், அது இன்னும் விரிவடைந்து கிராமத்தலைவர்கள், சிற்றரசர்கள் என்றவகையிலே ஆட்சிமுறைமைகள் உருப்பெற்றன. தேவைகளும் வாழ்க்கை முறைகளும் விரிவடைய விரிவடைய, வளர்ச்சியடைந்த சமூகங்களின் நல்வாழ்வுக்கான ஒழுங்கமைப்புகளும் பொறுப்புகளும் தனித்தலைமைத்துவமிடமிருந்து பகிரப்பட்டு அமைச்சர்கள், பல்வேறுதுறைகள் இன்னும் பல்வேறு மட்டங்களில் பிரதானிகள் பிரபுக்கள் ஆகியவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இது மேலும் வளர்ந்து நவீன அரசாங்க முறைமைகளாக வளர்ச்சி பெற்றுள்ளன.

நவீன ஆட்சி முறைகளைக் கொண்டுள்ள சமூகங்கள் முன்னிலையிலுள்ள சமூகங்களெனவும் இச்சமூகங்கள் 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டில் மனித இனம் கண்டிராத மிகப் புரட்சிகரமான மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளன என்றும் கூறப்படுகின்றது. 21ம் நூற்றாண்டின் தேவைகள், 20ம் நூற்றாண்டில் ஏற்கப்பட்ட நல்லாட்சி பற்றிய கருத்துகளுக்கு மேலும் விரிவான அர்த்தங்களை நிர்ப்பந்தித்துள்ளன. பொதுவாக நல்லாட்சி / நல்லாழுகை என்று (good governance ) கூறப்பட்ட கருத்து விரிவடைந்து, பொருளாதார நல்லாழுகை ( Economic Governance), கல்வி நல்லாழுகை ( Education governance ), சுகாதார நல்லாழுகை (health Governance ) என்ற விதமாக மேலும் விரிவடைந்தது. இதற்கு ஏற்றதாக நல்லாட்சிக்குரிய பொறுப்புக்கள் இதுவரை இருந்ததுபோல் பல நிறுவனங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையிலிருந்து பல பங்காளிகள் மத்தியிலும் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. அதாவது ஜனாதிபதி, பராளுமன்றம், நீதித்துறை, அமைச்சுக்கள், மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள், உள்ளூராட்சி அரசாங்கங்கள் என்பவற்றுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் மேலும் விரிவாக்கம் பெற்று அப்பொறுப்புக்கள் சிவில் சமூகத்தினர், சமூக அமைப்புக்கள், தனியார் துறையினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய பங்காளிகளையும் சேர்த்து அவர்கள் மத்தியிலும் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இத்தகைய விதமாக நல்லாட்சிப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய தேவை முன்னேற்றமடையாத சமூகங்களிற்கு தேவையில்லை. நாம் எம்மையும் முன்னேறிய சமூகங்களின் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர்களென கூறவேண்டுமானால் இத்தகைய நல்லாட்சிக்கான நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

முந்திய காலங்களில் தனிமனிதர் மட்டத்திலும்சரி குடும்ப மட்டத்திலும்சரி சமூக மட்டங்களிலும்சரி அவர் அவர்களுக்கு ஏற்பட்ட வாழ்வியல் சவால்களை அவரவர்கள் மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்திருக்கலாம். நவீன சமூகங்கள் மத்தியில் பூகோளமயமாக்கலினாலும் அதிகளவில் மற்றவர்களில் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்ற தன்மை ஏற்பட்டுள்ளமையினாலும் 21ம் நூற்றாண்டின் வாழ்வியல் சவால்கள் தனித்து நின்று தீர்க்கப்பட முடியாதவையாக இருப்பதோடு கூட்டு முயற்சிகளையும் பொதுவான ஒழுங்குகளையும் நிர்ப்பந்திப்பனவாகவும் உள்ளன. இதனால் சமூகத்தில் பல்வேறு பிரிவினருடையதும் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகியும் விட்டது. குறிப்பாக உள்ளூர் மக்களின் வாழ்க்கை பற்றிய தீர்மானங்களை எடுப்பதில் சமூகங்கட்கு அண்மையில் தீர்மானம் எடுக்க விடுதல் (Proximity), எந்தெந்த விடயங்களை எந்தெந்த மட்டங்களில் கையாள முடியுமோ அந்தந்த மட்டங்களில் ஒப்படைத்தல் (Principles of subsidiary)இ மற்றும் உள்ளூர் மட்ட விடயங்களை சுயமாகத் திர்மானம் எடுத்தல் (Principles of Autonomous ) ஆகிய விடயங்கள் வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களாயுள்ளன. சகல வளர்ந்த நாடுகளிலும் இக்கருத்துகளிற்கு ஏற்ப உள்ளூர் சமூகங்களுக்கே பெருமளவு ஆட்சிப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வளர்ச்சித்திசைக்கு ஏற்ப இலங்கையிலும் உள்ளூராட்சி மன்றங்கள் தங்கி வாழும் நிறுவனங்கள் என்ற நிலையிலிருந்து சுய ஆட்சி உள்ளூர் - அரசாங்கங்கள் என்ற அந்தஸ்துக்கு மாறவேண்டிய காலம் வந்துள்ளது.

சுயஆட்சி உள்ளூர் அரசாங்கங்களின் தோற்றமானது பல்வேறு அரசியல் சூழல் நிலைமைகளால் இலங்கையில் காலம் பின்தள்ளப்பட்டு வந்துள்ளது. எனினும் கற்றோரின் விடாமுயற்சி காரணமாக பல்தரப்பு மூல உபாயமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயனுறுதி மிக்க உள்ளூர் தன்னாட்சி அரசாங்க நிகழ்வொன்றில் பிரவேசிக்குமுகமாக 2007ம் ஆண்டு யூலை மாதம் உள்ளூராட்சி மற்றும் மாகாணபைகள் அமைச்சினால் புதிய தேசியக் கொள்கையொன்று பிரகடனம் செய்யப்பட்டது. இந்தக் கொள்கை எத்தகையதொரு ஆட்சிமுறைமையினை ஏற்படுத்தினாலும் கூட உள்ளூர்த்தன்னாட்சி அரசாங்கங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை உறுதிபட அங்கிகரிப்பதோடு, அத்தகைய அரசாங்கங்களை நிறுவுவதில் கைக்கொள்ளப்படவேண்டிய கொள்கைகள், தந்திரோபாயங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பனவற்றை விளக்குவதாகவும் உள்ளது. இலங்கையில் நல்லாட்சியின் வெற்றி என்பது உள்ளூர்த்தன்னாட்சி அரசாங்கங்களினை சிறப்பாக அமைத்துக் கொள்வதிலேயே தங்கியுள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி சேவை வழங்கல்

## (Process Re-engineering for Improved Local Government services (eLocal Government Project))

ததிரு. சுனில் பெர்னான்டோ,
ஆலோசகர்,
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு. மற்றும்
திரு. துசா முகுன்தன்/ திரு. ஹரின் குனவர்தன ICTA யில் இருந்து

### பின்புலம்

உள்ளூராட்சி சபைகள் வழங்கும் சேவைகளை மிகுந்த மக்கள் நேயமுடையதாக மாற்றுவதை நோக்காக் கொண்டு, உள்ளூராட்சி , மாகாண சபைகள் அமைச்சும் இலங்கை தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவரும் (ICTA) புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளன. இலங்கை தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவரின் பிரதான நிறைவேற்று அதிகாரி ரெசான், தேவபுர அவர்களும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கெசியன் ஹேரத் அவர்களும் ந உள்ளூராட்சி கருத்திட்டத்தினை அமுல்படுத்துமுகமாக 2009 மார்ச் 4 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்ட போது இந்த நிகழ்வு ஆரம்பமானது.

"ந உள்ளூராட்சி கருத்திட்டம்" என அழைக்கப்படும் இக்கருத்திட்டம் பின்வரும் வினாக்களைத் தொடுக்கின்றது: "உள்ளூராட்சி அதிகார சபைகள் மக்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்களா? இலங்கையில் தற்போதுள்ள 330 உள்ளூர் அதிகார சபைகளும் அவற்றிற்கு பொறுப்பாக வழங்கப்பட்டிருக்கின்ற சேவைகளை வினைத்திறனுடன் வழங்குகின்றனவா?" கருத்திட்டமானது நாட்டிலுள்ள 18 மாநகர சபைகள், 42 நகர சபைகள், மற்றும் 270 பிரதேச சபைகள் ஆகியவற்றின் சேவைகளில் கவனம் குவிக்கின்றது. அவை நிறைவேற்ற வேண்டும் எனப் பாரம்பரியமாக எதிர்பார்க்கப்படும் சேவைகள் நான்கு வகைகளைக் கொண்டுள்ளன: பொதுச் சுகாதாரம், பொது வீதிகள், மற்றும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகள். பொதுவாக பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் சௌகரியம், வசதி மற்றும் நலனோம்புகையை மேம்படுத்தல் என்பவற்றுடன் இணைந்தே இச்சேவைகள் வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரதேசத்தின் சூழலை அபிவிருத்தி செய்து பாதுகாத்தல் அகிய செயற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் உள்ளூர் அதிகார சபைகளின் நோக்கெல்லை விரிவாக்கப்படவுள்ளது எனத் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

### பிரச்சினைகள்

பல வருடங்களாக உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பாக பாரதூரமான பிரச்சினைகள் இருந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான மோசமான சேவை விநியோகமும், சமூக பொருளாதாரப் பங்களிப்பும் செயற்திறனும் வினைத்திறனும் அற்ற ஆளுகையினால் ஏற்படுகிறது எனக்கருதப்படுகிறது. இதனால் பிரச்சினைகள் மேலும் தெளிவாக விளக்கப்படுகின்றன. ஆவையாவன:
அர்த்தமிகு சனநாயக பிரதிநிதித்துவப்படுத்தலை நோக்கிய வசதிப்படுத்தல் இல்லாமை, செயற்திறன் மிகு தரவு முகாமைத்துவ முறைமை இல்லாமை, உள்ளூராட்சியில் பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளாமை, சிவில் சமூகப் பங்கேற்பு இல்லாமை, வழக்கொழிந்த முறைமைகள் மற்றும் வினைத்திறனற்ற வளங்கள் மற்றும் இறைவரி முகாமைத்துவம் மற்றும் சேவை விநியோகத்தில் வகைப்பொறுப்பும் பதிற்செயற்பாட்டுத் தன்மையும் இல்லாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு

'e-டுபு கருத்திட்டமானது" இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்றே முன்மொழியப்பட்டுள்ளது. திட்டமானது இலவச மென்பொருள் அணுகுமுறையுடன் ICTA தீர்வினை உருவாக்கி அமுல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை இலவசமாக சகல உள்ளூராட்சி அதிகார சபைகளிலும் நிறுவி அவற்றின் பின்வருவன போன்றதான அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியும்: ஆளுகையில் வினைத்திறனையும் செயற்திறனையும் அதிகரித்தல், சமூக வகைப்பொறுப்பினையும் வெளிப்படைத் தன்மையினையும் மேம்படுத்துவதன் மூலம் பிரசைகள் நேயமிக்கதான சேவை விநியோகத்தை உறுதிப்படுத்தல், சமூக உள்ளடக்கத் தன்மையை அதிகரித்தல் மற்றும் வாய்ப்புக்களை அடைந்து கொள்ளக் கூடியமை, உள்ளூராட்சி அதிகார சபைகளின் இறைவரித் தளத்தை வலுப்படுத்தல், பங்கேற்புமிகு நல்லாட்சியை ஊக்குவித்தல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தித் திசைமுகப்படுத்தல்களில் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவம்.

கவனக்குவிப்புப் பரப்புக்கள்

பின்வரும் தலைப்புக்களின் கீழ் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சேவைகளைக் கருத்திட்டம் கருத்தில் கொள்கிறது.

- பொதுச் சுகாதாரம், உள்ளூர் அதிகார சபைகள் பொதுச்சுகாதார அதிகார சபையாகச் செயற்பட்டு, திண்மக் கழிவினை முகாமைத்துவம் செய்தல், வடிகால்களைப் பராமரித்தல், கழிப்பிட மற்றும் தங்குமிட வசதிகளை வினைத்திறன் மிக்கதாக்குதல், காணி மற்றும் காட்டுயிர் பாதுகாப்பிற்கான பிரதேசம் மற்றும் அழுக்ககற்றல் சேவைகளை வழங்குதல், துப்பரவற்ற கட்டிடங்களைத் தடுத்தல் மற்றும் தொந்தரவினைத் தடுத்தல்.

- பொது வீதிச் சேவையானது பராமரிப்பு மற்றும் திருத்த வேலை எனப் பிரிக்கப்படுகின்றது. பொதுவீதி மருங்கிலும் அமைந்துள்ள கட்டிடங்கள் தொடர்பான சேவை, பொது வீதிக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் விசேட நோக்கங்களுக்காக பொது வீதியை பயன்படுத்தல்.

- சமுதாய அபிவிருத்தி பின்வரும் தலைப்புக்களைக் கொண்டுள்ளது: முன்பள்ளிகள், நூலகங்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி, பொதுப் பயன்பாடுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன: நீர் விநியோகம், சந்தைகள் மற்றும் அங்காடிகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள்.

- உள்ளூராட்சி அதிகார சபைகள் சூழலினைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தலினையும் மேற்கொள்கின்றன. வீதவரி வரி மற்றும் சொத்துக்களை மதிப்பிடல் ஆகியவை இறைவரி முகாமைத்துவத்தின் கீழ் வருகின்றன.

**தொழில்நுட்பத்தின் பொருத்தமான பிரயோகத்தினால் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்.**

- மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை
- இயக்கத்தின் வினைத்திறன் அதிகரிப்பு.
- இயைபுறல் மற்றும் வகைப்பொறுப்பில் முன்னேற்றம்.
- பணியாளர்களின் உற்பத்தித்திறனில் அதிகரிப்பு
- தொழில்நுட்பத்தின் வல்லமையின் செல்வாக்கு செயற்படுதல்.
- பகிரப்பட்ட சேவைகளை இயலுமாக்கல்
- உள்ளூர் பொருளாதாரத்தை நிலைபேறானதாக்கல்.
- சூழலைப் பராமரித்தல் பாதுகாத்தல்.
- சமூகப் பராமரிப்பை வழங்குதல்
- கல்வியில் தராதரங்களை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Private Public partnership for Local Economic Development

## பொருளாதார ஆளுகைக்கான ஒட்டுமொத்தத் தொகுப்பு

திரு. வி.எஸ். ஸ்ரீகாந்தா,
திட்ட முகாமையாளர்,
ஆசிய நிலையம் மற்றும்
திரு. எம். உதயகுமார்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
கிழக்கு மாகாணம்.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சியானது பிராந்தியங்களிலும், வேறு இடங்களிலும் சமமற்றதாக இருக்கின்றது என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமாகும். வளர்ச்சியானது மேல்மாகாணத்தில் அதிகம் செறிந்திருக்கின்றது. அதேவேளை, உள்ளூர் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்காக சிறிதளவு வாய்ப்பினையே கொண்டுள்ளது. அல்லது வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. நிலவுகின்ற இந்த நிலைமைக்கு பல காரணங்களைக் கூறமுடியும். பிரதானமாக, மோசமான உட்கட்டமைப்பு வசதிகளைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், மற்றுமொரு பிரதான பரமானம் உள்ளூர் பொருளாதார ஆளுகையாகும். இங்கேயே, சிறு அலகுகளுக்கு அதிகாரத்தை வழங்குதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். உள்ளூர் வியாபாரங்களுக்கு மிகவும் உகந்த வியாபாரச் சூழலினை உருவாக்குமுகமாக உள்ளூர் கரிசனைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஆட்சியின் கீழ் மட்டம் அதன் எதிரிணையான தனியார் துறையுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு இது அழைப்பு விடுக்கிறது. சிறு அலகுகளுக்கு அதிகாரத்தினை வழங்குதல் என்பது, உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உப-தேசிய அரசாங்கங்களின் செயற்பாட்டுக் கலாசாரத்தில் ஒரு மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. பங்கேற்பு மிகு முறையிலான தீர்மானம் வகுத்தல், வகைப் பொறுப்புமிகு செயல்நிறைவேற்றுகை, தகவமைத்துக் கொள்ளக் கூடிய கொள்கைகள் மற்றும் பதிற்செயற்பாடுமிக்கதான கலாசாரம் ஆகியவை உறுதியான பொருளாதார ஆளுகையின் தூண்களாக மாறவேண்டும்.

## உள்ளூராட்சிச் சூழமைவு

உள்ளூர் பொருளாதாரத்தில் காணப்படும் தற்போதைய நிலைமையினை, உள்ளூராட்சி முகவர்கள் மற்றும் உள்ளூர் வியாபாரத் துறை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பாடல் இன்மையினால் ஏற்பட்ட ஒன்று எனக்குறிப்பிடலாம். இடைவெளிகளோ மிகவும் விசாலமானவையாக இருக்கின்றன. இரு துறைகளுமே தனிமையில் செயற்படுகின்றன. □சேவைகள் வியாபாரத்தின் நன்மைக்காக உள்ளூராட்சியினால் வழங்கப்படுகின்றன, அவை இதற்க பதிலாக தமது வரியினைச் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன□ எனும் நியம எண்ணக்கரு குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒரு தவறான கருத்தியலாகவும் கூட்டு உழைப்பிற்கான ஒரு தடையாகவும் இருக்கின்றது. பல்வேறு விதமான பங்கீடுபாட்டாளர்களுக்கு இடையில் நிலவும் இந்த இடைவெளியானது நிரப்பப்படல் வேண்டும். இதன் மூலம் அனைவரும் ஒன்று சேர்ந்து சிறந்த சூழலினை உருவாக்க உழைக்க முடியும். அதன் விளைவாகச் சிறந்த உள்ளூர் பொருளாதாரத்தின் உருவாக்கத்திற்கு இட்டுச் செல்ல முடியும்.

## செயன்முறை

செயன்முறையானது சிக்கலானதல்ல. அது கலந்துரையாடலிலேயே தங்கியுள்ளது. உள்ளூராட்சியும் தனியார் துறையும் அவற்றின் கரிசணைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும், பொதுவான இலக்கினை அடைவதற்காக உடனுழைப்பதற்கு இணங்குவதற்கும் வாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன. இதற்குப் பிரதானமானது பகிரப்பட்ட ஒரு தொலைநோக்கினைக் கொண்டிருப்பதேயாகும். சில உள்ளூர் அதிகார சபைகள் இத்திசையில் செல்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆர்வமுள்ளவர்களின் பிரதிநிதித்துவத்தினை வசதிப்படுத்துவதற்காக அவர்கள் செயற்பாட்டிற்கான பொறிமுறைகளை உருவாக்கியுள்ளனர்.

## புலனுணரப்பட்ட நன்மைகள்

நன்மைகள் எண்ணற்றவையாகும். உதாரணங்களைக் காட்ட முடியும். சில முன்னணி நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலாங்கொடை நகர சபையின் துணை விதிகளினை உருவாக்குதல்.

உள்ளூரில், பொதுவாக நகரங்களில் நிலவும் துணைவிதிகள் பொதுவாக பழமையானவையாகவும் நவீன நகரப் பொருளாதாரத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவையுமாக இருக்கின்றன. அண்மைக்காலம் வரையிலும் தென்மாகாணத்தின் அம்பலாங்கொடை நகரசபை இப்பிரச்சினைக்கு முகம் கொடுத்தது.

### சவால்கள்

திறந்த பொருளாதாரத்தில் திறந்த சந்தைகளை அறிமுகப்படுத்தியதன் காரணமாக கடந்த மூன்று தசாப்த காலத்தில் சமூக-பொருளாதார சூழல் மாற்றமடைந்துள்ளது. இது உள்ளூராட்சியின் ஒழுங்குபடுத்தல் சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. இருக்கின்ற பிரதான சவால்களில் ஒன்று உள்ளூராட்சியின் இறைவரியுடன் தொடர்புடையதாகும். வீத வரிகளும் வரிகளும் மீளாய்வு செய்யப்படாமல் 50 வருடம் பழமையான துணை விதிகளினாலேயே ஆளுகை செய்யப்படுகின்றன. உதாரணமாக, நடைபாதையில் சட்டவிரோதமாக பொருட்களை விற்பதற்குரிய ஆகக்கூடிய குற்றப்பணம் ரூபா. 20/- ஆகும்.

இப்பிரச்சினை இருமடங்கானதாகும். ஒழுங்குவிதியின் அரசாங்க அமுல்படுத்துகையும் ஒழுங்கு விதிகளுக்கு வியாபார முறைமைகள் இணங்காமையும் சுமையானதாகவே இருக்கின்றன.

### தீர்வு

உள்ளூர் தனியார்துறைப் பிரதிநிதிகளுடன் நடத்திய பல கலந்துரையாடல்களின் காரணமாக, தற்போதுள்ள துணை விதிகளினை மீளாய்வு செய்து தேவைக்கேற்ப புதிய விதிகளை உருவாக்குவது எனத்தீர்மானிக்கப்பட்டது. துணைவிதிச் செயன்முறையானது உள்ளூராட்சி முறைமைக்கு ஒன்றும் புதியதல்ல. எவ்வாறாயினும், மீளாய்விற்கான தேவையினை அடையாளம் காண்பதிலும் நடவடிக்கையினைத் திட்டமிடுவதிலும், மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக அது சமர்ப்பிக்கப்படும் இறுதிக் கட்டம் வரை அதனைப் பின் தொடர்வதிலும் தனியார் துறை வகித்த பாத்திரம் சுவாரஷ்யமான ஒரு கூறாகும்.

### செயன்முறை

1. பிரசைகள் மற்றும் தனியார் துறையினருடனான கலந்துரையாடல் மூலமாக பிரச்சினைகளை அடையாளம் காணல்.

2. திருத்தச் செயன்முறையினை கருத்தியலாக்குதல்.

3. பொருத்தமான அனுபவமுடைய வளவாளர்களை அடையாளம் காணுதல்.

4. தற்போதைய துணைவிதிகளைப் பற்றிக் கவனமாகச் சிந்தித்து, புதிய தேவைப்பாடுகள் பற்றிய கருத்துக்களைத் தாராளமாகப் பெற்றுப் பரிசீலிக்கவும்.

5. நிபுணர்களைக் கொண்டு புதிய துணை விதிகளினை வரையவும்.

6. பிரசைகள் மற்றும் தனியார் துறையினருடன் நடத்தும் ஆலோசனைகள் மூலம் மீளாய்வின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துக.

7. பின்னூட்டலுக்கு அமையத் திருத்துக.

8. ஆலோசிப்புகள் மூலம் மீள் விஜயம் செய்க.

9. உள்ளூர் கவுன்சிலின் இணக்கத்திற்காகச் சமர்ப்பிக்கவும்.

10. மாகாண சபை மீளாய்விற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கவும்.

11. இணக்கத்தினைப் பெற்று அமுல்படுத்தவும்.

### பெறுபேறு

இச்செயன்முறையினூடாக, நான்கு வெவ்வேறு செயற்பாட்டுப் பரப்புக்களை உள்ளடக்கும் முப்பத்தி நான்கு துணை விதிகள் அம்பலாங்கொடை நகரசபையினால் மீளாய்வு செய்யப்பட்டுத் திருத்தப்பட்டன.

தென் மாகாணத்திலுள்ள சகல நகரங்களுக்கும் பிரயோகிக்கத்தக்கதான நியமத் துணைவிதிகளின் தொகுப்பு ஒன்றினைத் தொகுக்கும் முயற்சியாக 34 துணைவிதிகள் மாகாண சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தளத்தில் பஸ் நிலையத்தினையும் சந்தைத் தொகுதி ஒன்றினையும் நிர்மாணித்தல்.

### பின்புலம்

வடமேல் மாகாணத்தில் புத்தளம் ஒரு நகர மையமாக விளங்குகின்றது. நகரத்தில் பல பிரயாணிகள் வந்து போவதனால், போக்குவரத்து என்பது அத்தியாவசியமானதாகவும் முக்கியமானதாகவும் விளங்குகின்றது.

### பிரச்சினை

புத்தளத்திற்கு பெரும் எண்ணிக்கையில் பிரயாணிகள் வந்து போவதனால் புதிய பஸ் நிலையத்திற்கான தேவை அடையாளம் காணப்பட்டது. ஆனால் நிதியிடல் ஒரு பிரதான பிரச்சினையாக இருந்தது.

### செயன்முறை

1.சபைப் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், தனியார் துறையினரும் பொதுவான கரிசணைகளைக் கலந்துரையாடுகின்ற மாதாந்த ஒன்றுகூடலில் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் கலந்துரையாடவும்

2. புதிய பஸ் நிலையத்திற்கு நிதி இல்லாத காரணத்தினால், பஸ் நிலையத்தின் மருங்கினில் கடைத்தொகுதி ஒன்றினைக் கட்டுவது எனத்தீர்மானிக்கப்பட்டது. வியாபார சமுதாயம் கடைகளுக்கு வைப்புப் பணமாக பணத்தினை வழங்க முன்வந்ததன் மூலம் நிர்மாணத்திற்குத் தேவையான முதலீட்டை வழங்கத் தயாராகவிருந்தது.

3. திட்டங்கள் வரையப்பட்டன. பஸ் நிலையத்தின் மருங்கினில் 136 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியை நிர்மாணிப்பதனைத் திட்டமிடப்பட்டது.

4.கருத்திட்டத்திற்கு ஊடகத்தின் மூலம் சிறந்த விளம்பரம் கொடுக்கப்பட்டது. 136 கடைகளும் போட்டிமிகு கேள்வி கோரல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டன. 86 கடைகளைக் குத்தகைக்கு விட உடன்படிக்கை எட்டப்பட்டது. மிகுதி 51 கடைகளும் வேறு வியாபாரங்களுக்கு குத்தகைக்கு விடப்பட இருந்தன.

5. நிர்மாணத்திற்கு தேவையான 80 மில்லியனில் 50 மில்லியன் ரூபா வைப்புப்பணமுறை மூலம் சேகரிக்கப்பட்டது.

6. இக்கருத்திட்டமானது எதிர்பார்க்கப்படும் 110 மில்லியன் ரூபா வருடாந்த வருமானத்தை நகர சபைக்குப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் ஈற்றில் பயன் அளிக்கும்.

### நன்மைகள்

இக்கருத்திட்டமானது ஒரு புதிய பஸ்நிலையத்திற்கான கோரிக்கையுடன் ஆரம்பித்து இரட்டிப்பு நன்மையுடன் முடிவடைந்தது. பிரசைகளுக்கு பஸ் நிலையமும், உள்ளூர் வியாபாரத்திற்கு புத்துயிரூட்டவும் உள்ளூராட்சிக்கு உத்தரவாதமிகு இறைவரியை வழங்கவும் கடைத்தொகுதியு மென அது பூர்த்தியானது.

## கிண்ணியா நகர சபையில் பருவகால வியாபாரிகளின் பிரச்சினையைத் தீர்த்தல்.

### பின்புலம்

கிண்ணியா நகருக்கு அண்மையில் வசிக்கும் வியாபாரிகள் பண்டிகைக் காலங்களில் பொருட்களை விற்பதற்காக அங்கே வருவது வழமையாகும். இவர்களுக்கு நகர சபை உள்ளூர் வரிகளை விதிப்பதில்லை. இந்தப் பருவகால வியாபாரிகள் நடமாடித்திரிவதனாலும் அவர்களின் பொருட்களை விற்பதற்கு வீட்டுக்கு வீடு செல்லக்கூடியதாக இருப்பதாலும் கிண்ணியாவில் நிலை பெற்றுள்ள வியாபாரிகளை விடக் கூடுதல் இலாபத்தினை இவர்கள் பெறுகின்றனர்.

### பிரச்சினை

இப்பருவகால வியாபாரிகள் ஒழுங்குபடுத்தலுக்குட்படாத காரணத்தினாலும், கிண்ணியாவிலுள்ள வழமையான வியாபாரிகளுடன் ஓர் இணக்கமற்ற போட்டியை உருவாக்குவதனாலும் நகர சபைக்கு பிரச்சினையாக மாறியுள்ளனர். பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறை

1. இப்பிரச்சினையைப் பற்றி சபை உறுப்பினர்களும் உள்ளூராட்சி நிர்வாகிகளும், வர்த்தகர் சங்க உறுப்பினர்களும் கலந்துரையாடி சாத்தியமான தீர்வு பற்றி பல கருத்துக்களை வெளியிட்டு ஆராய்ந்தனர்.

2. சபை இவ்வியாபாரிகளிடம் வரி அறவிட்டு அதன் மூலம் அவர்களை ஒழுங்குபடுத்தியது.

3. வரிசேகரித்தலை வர்த்தகர் சங்கத்திடம் மேற்கொள்ளப் பணிப்பது எனச் சபை தீர்மானித்தது.

4. பருவகால வியாபாரிகள், வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக நகரத்தினுள் இடம் ஒதுக்கப்பட்டது. பொருளாதார ஆளுகைக்கான ஒட்டுமொத்தத் தொகுப்பு

பெறுபெறு / நன்மை

வரி சேகரிப்பின் மூலம் வர்த்தகர் சங்கமானது (15% னைத் தாம் வைத்துக் கொண்டு 85% னை சபைக்குச் செலுத்ததல்) தமது நிதி நிலையினையும் அதேவேளை உள்ளூராட்சி அதிகார சபையின் நிதி நிலையினையும் முன்னெற்றியுள்ளனர். மேலும் பருவகால வியாபாரிகள் நகரத்தின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டிருப்பதனால் தாம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகத் திருப்தியடைந்தனர்.

**மாத்தளை மாநகர சபையில் வாகனத்தரிப்பிடம் வெளிவளச் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளது.**

பின்புலம்

பெருமளவிலான வர்த்தக நடவடிக்கையினாலே மாநகர சபைப் பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசல், தரிப்பிடப் பிரச்சினை போன்றவை தோன்றுவது இயல்பாகும். மேலும் இப்பிரதேசம் இரண்டு பெரிய மாநகரசபைப் பிரதேசங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளது. இதனால் இப்பிரதேசத்திற்கு அதிகமானோர் வந்து செல்கின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, சபை, வர்த்தகர்கள், பிரசைகள் மற்றும் பொலிசார் ஆகிய அனைவரையும் உள்ளடக்கிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் தேவையாகும்.

பிரச்சினை

மாத்தளை நகரத்தில் வாகனங்களுக்கு உரிய தரிப்பிட வசதி இல்லை. இதனால், பாரிய வாகன நெரிசல் ஏற்படுகின்றது. இது நாளாந்த வியாபார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது. ஏனெனில் அதிகமானோர் கடைகளுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்திச் செல்கின்றனர், ஆனால் அக்கடைகளில் அவர்கள் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை.

செயன்முறை

1. மாத்தளை நகரசபை மற்றும் வியாபார சமுதாயம் ஆகியவற்றிற்கிடையிலான கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளை அடையாளம் காணல்.

2. தரிப்பிட முறைமைக்காக சபையும் வியாபார சமுதாயமும் திட்டமொன்றினை வரைந்தன.

3. இலாபத்தில் 70% மாத்தளை மாநகரசபைக்கும் 30% மாத்தளை மாவட்ட வர்த்தக சம்மேளனம் மற்றும் தொழிற்துறைக்கும் செல்ல வேண்டும் என இணங்கப்பட்டது.

4. புதிய மேற்பார்வையாளர்களின் நியமனத்திற்கு சம்மேளனம் உதவியதுடன் கட்டணச் சேகரிப்பினையும் நிர்வகிக்கின்றது. சேகரிக்கப்பட்ட கட்டணம் ஒவ்வொரு நாளின் முடிவினிலும் மாநகரசபைக்கு கையளிக்கப்படுகிறது.

5. சபையினில், முன்பு 4 தரிப்பிட மேற்பார்வையாளர்களே இருந்தனர். இப்போது 14 பேர் உள்ளனர். சபையில் நிரந்தர ஊழியர்களாக இருக்கும் 2 பேரைத் தவிர ஏனைய மேற்பார்வையாளர்களுக்கு தரகு அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

6. மாநகர சபை ஆளணியினரின் பதிவுகளைப் பேணிவருவதுடன் அவர்களின் சம்பளத்தினையும் வழங்கி வருகின்றது.

பெறுபேறு

சபைக்கும், சம்மேளனத்திற்கும் தரிப்பிட முறைமையினால் மேலதிக வருமானம் கிடைக்கின்றது. சுமுகமான வியாபார நடவடிக்கைகளையிட்டு மாத்தளை வியாபார சமுதாயம் மகிழ்ச்சி அடைந்துள்ளது.

மாதாந்தம் 600,000/- னைப் பெறும் ஆற்றல் கருத்திட்டத்திற்கு உண்டு. தற்போது அது 295,000/- னைப் பெறுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Local Development Planning in Northern Province

## உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடல் - வட மாகாணம்

பி.ஜோன்சன்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வட மாகாணம்.

### பின்புலம்

நாட்டின் அடிமட்டப் பிரிவுகளின் முன்னேற்றத்தில் உள்ளூராட்சியே உச்ச அமைப்பாக இருக்கின்றது. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய வளங்களைக்கொண்டு தமது பிரதேசத்தினைத் திட்டமிடுவதற்கு அவற்றிற்கு இப்பொழுது இயலாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் என்னவெனில்,திட்டமிடல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளிடம் தகுதியும் ஆற்றலும் உள்ள ஆளுமைகள் இல்லாமையே ஆகும். பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபை போன்ற சமாந்தரக் கட்டமைப்புக்களால் ஒரேவிதமான திட்டங்கள் மீண்டும் மீண்டும் அமுல்படுத்தப்படுகின்றன. பிரதேச சபையின் சில செயற்பாடுகள் சில அமைப்புக்களினால் கைப்பற்றிக்கொள்ளப்படுகின்றன. அவையாவன, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, முதலீட்டுச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை மற்றும் சில பகுதியான சுயாட்சியுடைய துறை முகவர்கள் ஆகியோர்

2007 ல் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சித் தேசிய கொள்கைப்பிரகடனம் மற்றும் 4ம் இலக்க உள்ளூராட்சி மறுசீராக்கல் சுற்றறிக்கை ஆகியன இதனை வலியுறுத்துவதுடன் திட்டமிடலிற்கான வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன. கொள்கை மற்றும் மறுசீராக்கலினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் தற்போது இருக்கின்ற சட்டங்களுக்கு திருத்தங்களையும் மாற்றங்களையும் தேவைப்படுத்துகின்றன. உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடல் செயன்முறையானது உள்ளூர் அதிகார சபைகளிடம் இருக்கின்ற வளங்களைத் திட்டமிடுவதற்கு வழிகாட்டுதலையும் உதவியையும் வழங்குகின்ற கருவியும் உபாயமார்க்கச் சாதனமுமாகும். உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடலானது உள்ளூர் அதிகாரசபைகளினால் தகவமைத்துக்கொள்ளப்பட்ட பங்கேற்புமிகு செயன்முறையாகும். இது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அவசியமானதும் தேவையானதுமாகும்.

### பிரச்சினை

ஒரு பொதுவான உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடல் செயன்முறை இல்லாதபோது, அது உள்ளூர் மட்டத்திலே ஒழுங்கற்ற திட்டமிடலுக்கும் வளங்களின் இழப்பிற்கும் இட்டுச்செல்லும். இது மிகவும் வறிய மக்கள் உற்பத்தித்திறன்மிகு சொத்துக்கள் மற்றும் வளங்களினை அடைந்துகொள்வதைத் தடுப்பதனால், அது அவர்களினதும் மற்றும் பாதிப்புறு நிலையிலுள்ளவர்களினதும் வருமானத்தினை சீரழித்துவிடுகின்றது.

### தீர்வுகள்

☐ தேவையான மக்கள் மற்றும் துறையினர் அடைந்துகொள்ளும் வகையில் உள்ளூர் மட்ட வளங்கள் பொருத்தமான முறையில் பயன்படுத்தப்படவேண்டும்.

☐ பொதுவான இலக்குகளை நோக்கிச்செயற்படும் பங்கீடுபாட்டாளர்களை இணைப்பதன் மூலம் வளங்கள் இரட்டிப்பாகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படல்வேண்டும்.

☐ அனைத்து முகவர்களினாலும் ஒரு பொதுவான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

☐ உள்ளூராட்சியிலுள்ள மனிதவளங்கள் அதிகரித்த ஆற்றலின் அடிப்படையில் தமது அறிவையும் திறனையும் அதிகரிக்க வேண்டும்.

### உபாயமார்க்கங்கள்

☐ உள்ளூர் அபிவிருத்திச் செயன்முறையினைக் கையாளுவதற்கு ஒரு பொதுவான மன்றம் அமைக்கப்படல்வேண்டும்.

☐ திட்டமிடல் செயன்முறைக்காக பயிலுனர்களின் தொகுதியொன்று அமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்திற்கு அவற்றிற்கு ஆற்றல் வழங்கப்படல்வேண்டும்

☐ பல்வேறு துறைத்திணைக்களங்கள் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியில் உள்ளூராட்சியானது இணைப்பையும் ஒற்றுமையினையும் ஏற்படுத்தவேண்டும்.

☐ ஒரே பிரதேசத்தில் பணியாற்றும் பல்றே நிறுவனங்களின் அமுல்படுத்தல்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படல்வேண்டும்

☐ முகவர்கள் பல்திட்டங்களினை வகுப்பதில் இருந்தும் அவற்றிற்கு முக்கியத்துவம் வழங்குவதிலிருந்தும் தவிர்ந்துகொள்ளவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ சகல சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களையும் அரசாங்க நிறுவனங்களையும் இணைப்பதன் மூலம் அடிமட்டத்தில் மக்கள் திட்டமிடல் செயன்முறை வலுப்படுத்தப்படல்வேண்டும்.

☐ திட்டமிடல் செயன்முறையில், உள்ளூர் அதிகாரசபைகளில் செலவுச் சிக்கனமானதும் வினைத்திறன்மிக்கதுமான செயற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்

☐ சகல உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடல் செயன்முறைகளிலும், பல்பரிமானமிகு திட்டமிடல் முறையியல் தகவமைத்துக்கொள்ளப்படல்வேண்டும்.

☐ காலங்கடந்த திட்டங்களுக்குப் பதிலாக, பொருத்தமான வழிகாட்டலை வழங்குகின்ற புதிய சட்டகங்கள் அறிமுகப்படுத்தப்படல்வேண்டும்

☐ சகல பங்கீடுபாட்டாளர் முகவர்களுக்கு மத்தியிலும் ஒரு பொதுவான உடன்படிக்கை நிறுவப்படல்வேண்டும்.

☐ டுழஉயட னுநஎநடழிஅநவெ "டயnniபெ நுஒிநசஙைநெஉநள

## பங்கெடுப்பிலான திட்டமிடலின் கண்ணோட்டம்

## Local Development Planning in Northern Province

பி.ஜோன்சன்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வட மாகாணம்.

### பின்னணி

இலங்கையில் உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அபிவிருத்தியின் முன்னுரிமைகளின் பிரகாரம் வரவு செலவுத் திட்டத்தை ஒதுக்குவதற்கும், அத்துடன் செயற்பாடுகளின் திட்டமிடுதலிலும், அமுலாக்கத்திலும் மக்களைச் சம்பந்தப்படுத்துவதற்கும் உள் ளூராட்சி சபைகள் பொறுப்பானவையாகும்.

1999இல் உள்ளூராட்சி சீர்திருத்தங்கள் மீதான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையும், அதன் பின்னரான உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் சீர்திருத்தச் சுற்றறிக்கைகள் இலக்கங்கள் 4, 10 மற்றும் 2 ஆகியனவும் பங்கெடுப்பிலான் திட்டமிடலுக்கானதிசையைக் குறித்துரைக்கின்றன.

### நடைமுறை

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கு பங்கெடுப்பிலான திட்டமிடலும், வரவு செலவுத் திட்டமிடலும்' மீதான வழிகாட்டல் நூலில் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ள பின்வரும் நடைமுறை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு உதவுகின்றது:

### நடவடிக்கை

1 - ஆரம்பித்து வைத்தல்

- திட்டத்திற்கு தலைமைத்துவ அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி சபை திட்டமிடல் குழாமை ஒழுங்குபடுத்தல்
- ஒரு ஷநடைமுறைக்கு ஆதரவளிப்பவரை' அல்லது வசதிப்படுத்துனரை அடையாளங் காணுதல்
- திட்டமிடல் குழாமுக்கு வேலைத்திட்டமொன்றை விருத்தி செய்தல

நடவடிக்கை 2

- தரவைத் திரட்டுதல், பங்காளரைப் பகுப்பாய்தல் மற்றும் பிரச்சனையை அடையாளம் காணுதல்
- பங்காளரின் பகுப்பாய்வொன்றைப் பொறுப்பேற்றல்
- தரவைத் திரட்டி, நடைமுறையிலான திட்டங்களையும், ஆவணங்களையும் மதிப்புரைத்தல்
- வரைபட வளங்கள்
- பிரச்சனைகளை அடையாளங் காணுதல்
- பங்காளர்களுடன் ஆலோசனையை நடத்துதல்
- பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை 3

- நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள், மற்றும் நோக்கங்கள்

-உள்ளூராட்சி சபையின் நோக்கினை வரையறுத்தல் அல்லது மீளப்பார்வையிடுதல்

-உள்ளூராட்சி சபையின் செயற்பணிக் கூற்றினை வரைதல் அல்லது மதிப்புரைத்தல்

நடவடிக்கை 4

- திட்டங்களையும், கருத்திட்டங்களையும், ஆற்றலளவைக் கட்டியெழுப்பும் தேவைகளையும் மற்றும் சட்டம் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளையும் அடையாளங் காணுதலும், முன்னுரிமைப்படுத்தலும

-திட்ட அல்லது சேவைப் பகுதியின் பிரகாரம் உத்தேசமான கருத்திட்டங்களை அடையாளங் காணுதல்
-நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல்
-நடுத்தர தவணையிலான செயல் திட்டத்திற்கான கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்துதல்
-ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலையும், அவசியப்படும் சட்டவாக்கத்தையும் அடையாளங் காணுதல்

நடவடிக்கை 5

- நிதிசார் வரைச்சட்டம், வருடாந்தத் திட்டமிடல், மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் மற்றும் மூலவளத்தை ஒன்றுதிரட்டுதல்

-கிட்டுகின்ற நிதிசார் மூலவளங்களை மதிப்புரைத்தல்

-திட்டத்தில் முன்னுரிமையிலான கருத்திட்டங்களின் மூலதனத் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல்

-வரவுள்ள ஆண்டுக்கு வருடாந்தத் திட்டத்தினுள்ளும், வரவு செலவுத் திட்டத்தினுள்ளும் கருத்திட்டங்களை ஒன்றிணைத்தல்

-மூலவள ஒன்றுதிரட்டல் மூலோபாயமொன்றை விருத்தி செய்தல்

நடவடிக்கை 6

- திட்ட மற்றும் கட்டியெழுப்புதல் அர்ப்பணிப்பினை முன்வைத்தல்

-வரைபுத் திட்டத்தின் எழுத்துமூல சமர்ப்பணமொன்றைத் தயாரித்தல்

-செல்லுபடியாகின்ற செயற்பாடுகளைத் திட்டமிடுதலும், நடத்துதலும்

-சபையின் அங்கீகாரத்திற்காக திட்டத்தை முன்வைத்தல்

-பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக திட்டத்தை அறிவித்தல்

நடவடிக்கை 7

- திட்ட அமுலாக்கத்தை நிருவகித்தலும், நிலைத்திருக்க வைத்தலும்

-கருத்திட்டத்தின் அமுலாக்கத்திற்காக பொறுப்புக்களைக் குறித்தொதுக்குதல்

-கண்காணித்தல், மதிப்பாய்வுக் குழாமொன்றைத் தாபித்தல்

-நிறைவேற்றப்பட்டவைகள் மீதான அறிக்கை

### நன்மைகள்

- மக்களின் அதிகரித்தளவிலான ஒத்துழைப்பும், பங்கெடுப்பும்
- உறுப்பினர்களினதும், பணியாளரினதும் மத்தியில் அதிகரித்தளவிலான கூட்டுமுயற்சி
- மேலதிகமான மூலவளங்களைத் தோற்றுவிப்பதற்கு அதிகரித்தளவிலான ஆற்றளல்வு
- சேவைகளைச் செம்மைப்படுத்தப்பட்ட விதத்தில் ஒப்படைத்தல்

## பங்கெடுப்பிலான நடுத்தர தவணை அபிவிருத்தி திட்டமிடல் - மட்டக்களப்பு மாவட்டம்

### பின்னணி

2006/7இல் தொழில்நுட்ப ஆதரவுடன் நடுத்தர தவணை பங்கெடுப்பு அபிவிருத்தித் திட்டமிடலை பரிசோதிப்பதற்கான வாய்ப்பினை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்நூராட்சி சபைகள் கொண்டிருந்தன. ஆரம்பத்தில், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் ஒரு சில பணியாள் உறுப்பினர்கள் அபிவிருத்தித் திட்டமிடலை வசதிப்படுத்தல் மீதான பயிற்சியை மேற்கொண்டார்கள். உள்ளூராட்சி ஆற்றலளவு அபிவிருத்தித் திட்டங்களைப் பலப்படுத்துவதற்காக உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் நல்லாட்சி மூலவள நிலையத்தினுள் பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

2008இல் ஆசிய மன்றத்தினதும், வேர்ள்ட் வி'னினதும் தொழில்நுட்ப ஆதரவுடன் மட்டக்களப்பு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் கிராமிய நீர் விநியோகத்தையும், சுகாதாரத்தையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதற்காக ஆறு உள்ளூராட்சி சபைகளைத் தெரிவுசெய்தது. அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துடன் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக தொடர்பான உள்ளூராட்சி சபைப் பகுதிகளின் கீழ்வரும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளை வசதிப்படுத்துவதற்கும் இந்த ஆறு உள்ளூராட்சி சபைகளுக்கு உதவியளிப்பதே இத் திட்டத்தின் முக்கியமான மூலக்கூறுகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் வசதிப்படுத்தல் அலகொன்றாக முழு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினை மாற்றுவதே இத்திட்டத்தின் விசேட அம்சங்களில் ஒன்றாகும். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கும், ஆறு உள்ளூராட்சி சபைகளின் மேலும் 30 உறுப்பினர்களுக்கும் வசதிப்படுத்தலைத் திட்டமிடுதல் மீது முழுமையான பயிற்சி வழங்கப்பட்டது. அதன் பின்னர் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் நெருங்கிய கண்காணித்தலின் கீழ் மூன்று மாதங்களைக் கொண்ட காலத்தினுள் கிராம உத்தியோகத்தர் திட்டங்களினதும், உள்ளூராட்சிச் சபைத் திட்டங்களினதும் தயாரிப்பினை வசதிப்படுத்தும் பொறுப்பு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

## பயனாளிகள்

2008 டிசம்பர் இறுதிக்குள், பின்வரும் 6 உள்ளூராட்சி சபைகளும், 129 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் அபிவிருத்தித் திட்டங்களின் தயாரிப்பினை முடித்துக் கொண்டன:

| | |
|---|---|
| 1.மண்முனை மேற்கு பிரதேச சபை (வவுணதீவு) | 24 கி.உ.பி. |
| 2.ஏறாவூர் பட்டின பிரதேச சபை (ஏறாவூர்) | 15 கி.உ.பி |
| 3.ஏறாவூர்பற்று பிரதேச சபை (செங்கலடி) | 26 கி.உ.பி. |
| 4.கோறளைப்பற்று பிரதேச சபை (வாழைச்சேனை) | 18 கி.உ.பி |
| 5.மண்முனை தென் மேற்கு பிரதேச சபை (கொக்கட்டிச்சோலை) | 24 கி.உ.பி. |
| 6.போரதீவுப்பற்று பிரதேச சபை (பளுகாமம்) | 22 கி.உ.பி. |
| மொத்தம் | 129 கி.உ.பி. |

## நன்மைகள்

இந்த திட்டமிடல் அப்பியாசத்தினால் தோற்றுவிக்கப்பட்ட முடிவுகள் மனதில் பதியத்தக்கவை. அவற்றில் சில வருமாறு:

**1. அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்குவதற்கு நிதி, தொழில்நுட்ப, பொருள், மற்றும் பெருமளவு வேறு ஆதரவுகள் ஆகியனவற்றை உள்ளூராட்சி சபைகளும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் பெற்றன.**

- கிராம உத்தியோகத்தர் பிரிவுத் திட்டங்கள் மீதான விசேட வலியுறுத்தலுடன் இந்த அபிவிருத்தித் திட்டங்களை வரவேற்பதற்கு முன்னே வந்த முதலாவது குழு வேர்ள்ட் வின் ஆகும். அந்த குறிப்பான அமைவிடங்களில் 10-15 வருடங்களைக் கொண்ட தமது நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் இந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுத் திட்டங்களை வேர்ள்ட் வின் பயன்படுத்திக் கொண்டது. சனசமூக நீர் விநியோகம், சுகாதாரம், தேகாரோக்கியம், மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற உள்ளூராட்சி சபைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த சில திட்டங்களை அமுலாக்குவதற்காக சார்வுரீதியில் பாரிய மூலதனங்களை வேர்ள்ட் வின் செய்தது.

- வேர்ள்ட் வின் அளித்த ஆதரவுக்கு மேலதிகமாக, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினரும், உள்ளூராட்சி ஆணையாளரும் மற்றும் கிழக்கு மாகாண சபையினரும் இந்தத் திட்டங்களைப் பெருமளவு அபிவிருத்தி முகவராண்மைகளுக்கு அனுப்பிவைத்ததுடன், அரசாங்க மற்றும் மாகாணத் திட்டங்களிலும் உள்ளடக்கியிருந்தன.

- உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் வேண்டுகோளின் பேரில், கள மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு மேலதிகமாக, உள்ளூராட்சி சபைகளினாலும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினாலும் தயாரிக்கப்பட்ட திட்டங்களை வருகை தந்த உலக வங்கி தூதுக்குழு மதிப்புரைத்தது. அடுத்த மூன்று வருடங்களில் இத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு, குறிப்பாக அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு போதியளவு நிதியங்களை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பட்டுள்ளது. தற்போது இந்த திட்டமும் கூட நடைமுறையில் உள்ளது.

**2. அதன் ஆற்றலளவுகளை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் விருத்தி செய்தது**

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தையும், தொடர்பான உள்ளூராட்சி சபைகளையும் சேர்ந்த பயிற்றுவிக்கப்பட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும், அபிவிருத்தி உதவியாளர்களினதும், முகாமைத்துவ உதவியாளர்களினதும், தொழில்நுட்ப உதவியாளர்களினதும் செயற்றிறனான வசதிப்படுத்தலின் ஊடாக உள்ளூராட்சி சபைகளினாலும், கிராம உத்தியோகத்தர் பிரிவினாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அந்த தீவிர திட்டமிடல் வசதிப்படுத்தலைச் செய்வதன் மூலம், பங்கெடுப்பிலான திட்டமிடலை மேம்படுத்துவதில் நிபுணத்துவத்தை பணியாளர் விருத்தி செய்தனர். வேறு உள்ளூராட்சி சபைகளின் திட்டமிடுதலை நகல்படுத்துவதில் மட்டுமன்றி ஆனால், ஒத்த செயற்பாடுகளுக்கு மூலவளங்களைப் பெறுவதில் அரசாங்க முகரவாண்மைகளுடனும், நன்கொடையாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் இந்த புதிதாக விருத்தி செய்யப்பட்ட நிபுணத்துவத்தினை உதவியை உள்ளூராட்சி ஆணையாளர் பயன்படுத்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உள்ளூர் திட்டமிடலுக்கு மாகாண சபை பதிலிறுத்தது

உள்ளூராட்சி சபையினதும், கிராம உத்தியோகத்தர் பிரிவினதும் பிரதிகளைப் பெற்ற பின்னரும், உளளூராட்சி ஆணையாளரினாலும், உதவி உள்ளூராட்சி ஆணையாளரினாலும் செய்யப்பட்ட சுருக்கமான விளக்கத்தைச் செவிமடுத்த பின்னரும் பின்வருமாறு திட்டங்களுக்கு மாகாண சபை பதிலிறுத்தது:

திட்டங்களின் சில மூலக்கூறுகளை அமுல்படுத்துவதற்கு ஆதரவை அளிப்பதற்கு உடன்பட்டது.

மாகாண அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதில் உள்ளீடுகளாக கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் உள்ளூராட்சிச் சபை திட்டங்களைப் பயன்படுத்தியது

நன்கொடையாளர்களுக்கு அந்தத் திட்டங்களைச் ‘சந்தைப்படுத்துவதற்கு’ மேலதிகமாக, கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல 42 உள்ளூராட்சி சபைகளிலும் அபிவிருத்தித் திட்டமிடலை நகலப்படுத்துவதற்கு நன்கொடை முகவராண்மையொன்றின் ஆதரவைப் பெறுவதில் உள்ளூராட்சி ஆணையாளரும், முதலமைச்சரும் வெற்றியடைந்தனர். இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது

## காரைதீவு பிரதேச சபையில் உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடல்

### பின்னணி

2006 ஏப்ரல் 15 அன்று காரைதீவு பிரதேச சபை தாபிக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆதரவுடன் அதே வருடத்திலேயே பிரதேச சபை நடுத்தர தவணையிலான உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கக்கூடியதாகவிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே, சனசமூகத்தின் சகல முக்கியமான பிரிவினர்களுடனான ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஐந்து வருட அபிவிருத்தித் திட்டமொன்றுடன் அதன் செயற்பாடுகளை காரைதீவு பிரதேச சபை ஆரம்பித்ததைத் கவனத்திற்கெடுப்பது முக்கியமானதாகும்.

### நன்மைகள்

தாபனத்தின் புதிய செயல்முறையான கலாசாரமொன்றை (வேறு பிரதேச சபைகளுக்கு ஒத்திருக்காத) விருத்தி செய்வதில் புதிதாகத் தாபிக்கப்பட்ட காரைதீவு பிரதேச சபையின் திட்டத் தயாரிப்பு நடைமுறையானது உதவியது. தலைவரின் தலைமையிலான தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும், பணியாளரும் சனசமூகத்துடன் நெருங்கிய உறவினை விருத்தி செய்ததுடன், சகல முக்கியமான அலுவல்களிலும், பொதுவான வழக்கமொன்றாக சனசமூகத்துடன் ஆலோசனை நடத்துவதை ஆரம்பித்தனர்.

மேலதிகமாக, உறுப்பினர்களுக்கும், பணியாளருக்கும், சனசமூகத் தலைவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், ஒன்றுசேர மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட செயற்பாடுகள் திட்டமிடல் நடைமுறையினால் ஆரம்பிக்கப்பட்ட பங்காண்மையை மேலும் ஒன்று திரட்டியது.

பெண்களினதும், சனசமூக அடிப்படையிலான தாபனங்களினதும், வர்த்தகச் சங்கங்களினதும், உயர்வான கல்வியுடனும், சீவியத்தொழில் திறமைகளுடனும் இளைஞர்களும், மற்றும் சிரேட்ட பிரஜைகளும் பிரதேச சபையின் செயற்றிறன் மீது பாரிய தாக்கமொன்றைச் செய்தனர் என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். இந்த முன்னேற்றத்தின் விளைவொன்றாக, வட்டாரத்தில் மக்களின் தேவைகளுக்கு பதிலிறுக்கின்ற நிறுவனமொன்றாக பிரதேச சபை விளங்குகின்றது.

அபிவிருத்தி முன்மொழிவை எழுதுவது மீது நிபுணர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பிரதேச சபைப் பணியாளரையும், சனசமூகத் தொண்டர்களையும் பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி முன்மொழிவுகளினுள் ஐந்து வருடத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல அபிவிருத்திக் கருத்துக்களையும் உருமாற்றுகின்ற வாய்ப்பினையும் காரைதீவு பிரதேச சபை கொண்டிருந்தது.

சனசமூகப் பதிலிறுப்பு அணுகுமுறையொன்றுடனும், பெருமளவு வேறு நல்லாட்சி தகுதிகளுடனும் குறுகிய நேர காலமொன்றினுள் விருத்தி செய்யப்பட்ட இந்த முன்மொழிவுகள் பலதரப்பட்ட அரசாங்க முகவராண்மைகளுக்கும், நன்கொடை சனசமூகத்திற்கும் பெருமளவு முன்மொழிவுகளை ‘சந்தைப்படுத்துவதில்’ உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நடுத்தர தவணை அபிவிருத்தித் திட்டத்தின் அமுலாக்கத்தின் முதலாவது ஆண்டில் (2006) நன்கொடையாளர்களிடமிருந்து ரூபா 44 மில்லியனுக்கு மேல் பிரதேச சபையினால் பெறக்கூடியதாகவிருந்தது.

சிறந்த அனுபவத்தையும் மற்றும் படித்த சனசமூகத் தலைவர்களின் ஆதரவுடனும், பயன்வாய்ந்த பேச்சுவார்த்தைகளின் ஊடாகவும் மக்களுக்கான விடயங்களைச் செய்கின்ற கலையைப் பிரதேச சபை கற்றிருந்தது.

மேலதிகமாக, மக்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும், தீவிரமாக ஆதரவளிக்கப்பட்டதுமான சிறந்த அபிவிருத்தித் திட்டமொன்றுடன் பிரதேச சபையொன்றின் உண்மையான பலத்தை அனுபவத்தின் ஊடாக காரைதீவு பிரதேச சபை கற்றுக்கொண்டது.

திட்டத்தின் அமுலாக்கத்தின் ஊடாக நன்மைகள்

கல்வி, மீன்பிடித்தல் கைத்தொழில், சுகாதாரம், சூழல் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு, சிறிய வியாபார முயற்சி, கமத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகியன மீதான திட்டத்தின் பிரதான மூலக்கூறுகளின் சாதனை கீழே சாராம்சப்படுத்தப்பட்டுள்ளது:

கல்வி - குறிப்பாக உயர்தர மட்ட மற்றும் சாதாரணதர மட்ட மாணவர்களுக்கு ஒரு தொடரான கருத்தரங்குகளை நடத்துவதன் மூலமும், மேலதிகமான வகுப்புகளை ஒழுங்குசெய்வதன் மூலமும் சனசமூகத்தின் தேவைகளுக்கு பிரதேச சபை பதிலிறுத்தது.

தாக்கம் - பொதுப் பரீட்சைகளில் காரைதீவு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைக் காட்டுவதை ஆரம்பித்ததுடன், சில மாணவர்கள் நாட்டின் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர்.

மீன்பிடித்தல் - பெருமளவு திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் மீன்பிடித் துறையில் அடையாளங் காணப்பட்டுள்ள பிரச்சனைகளில் பெரும்பான்மையானவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளன. மீன் பதப்படுத்தல் நிலையத்தைத் தாபிப்பதே ஒரேயொரு எஞ்சியுள்ள பிரதானமான பிரச்சனையாகும். இதன் பொருட்டு கட்டிடங்கள் தற்போது நிருமாணத்தின் கீழுள்ளன.

சுகாதாரமும், தேகாரோக்கியமும் - நடுத்தர தவணை அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெருமளவு செயற்பாடுகள் கடந்த மூன்று வருடங்களின் போது கவனத்திற்கு எடுக்கப்பட்ட அதேவேளை, சுகாதாரம் மற்றும் தேகாரோக்கியம் ஆகியன தொடர்பிலான கிரமமான சேவைகளின் ஏற்பாடு திருப்திகரமான மட்டமொன்றில் பராமரிக்கப்படுகின்றது. இந் நோக்கத்திற்காக UNEPS இலிருந்து ரூபா 40 மில்லியனைப் பிரதேச சபை பெற்றுக்கொண்டதுடன், சுகாதார அமைச்சுடனான கூட்டு முயற்சியுடன் நிருமாணம் மேற்கொள்ளப்படுகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகள் - கடந்து போன ஆண்டுகளில் வீதிகள், சாலைகள், வடிகாலமைப்புகள், சந்தைகள், பூங்காக்கள், நூலகங்கள், முன்-பள்ளிகள், மயானங்கள் போன்றவற்றின் அபிவிருத்திக்கும், பராமரிப்புக்கும் பாரிய தொகையிலான நிதியங்களை பிரதேச சபை ஒதுக்கியுள்ளதுடன், ஒன்றன் பின் ஒன்றாக திட்டத்தின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட மூலக்கூறுகளைக் கவனித்து வருகின்றது. காரைதீவு சந்தைத் தொகுதியை நிருமாணிப்பதற்கு நோஊனுறீ ஆதரவைப் பெற்றுக்கொண்டதே இது தொடர்பிலான பாரிய சாதனைகளில் ஒன்றாகும். இத்தருணத்தில் சந்தைத் தொகுதி நிருமாணத்தின் கீழுள்ளது.

சிறிய கைத்தொழில்கள் மற்றும் கமத்தொழில் - மக்களின் இந்த முக்கியமான தேவையைக் கவனத்திற்கெடுப்பது மீது மக்கள் வங்கியினதும், ADBஇனதும் கவனத்தை காரைதீவு பிரதேச சபை ஈர்த்தெடுத்தது. இந்த நிறுவனங்களினதும், அரச சார்பற்ற தாபனங்களினதும் ஆதரவுடன், மூலப் பொருட்களினதும், சந்தைப்படுத்தல் வசதிகளினதும் ஏற்பாட்டினை ஒழுங்கு செய்வதற்கு மேலதிகமாக, கமத்தொழில் முயற்சிகளுக்கும், சிறிய வியாபாரங்களுக்கும் மற்றும் கோழிப் பண்ணைகளுக்கும் உயர்வளிப்பதற்காக வியாபார முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியுடன் நிதிசார் ஆதரவை வழங்குவதற்கு ஒரு தொடரான செயற்பாடுகளுக்கு பிரதேச சபை வசதியளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தேகம பிரதேச சபை - சம்பந்தப்பட்ட சனசமூகக் குழுக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஆளுனர்களினால் நிருவகிக்கப்படும் எழுபது சனசமூகச் சபைகளை தாபித்தது. வருடம் முழுவதும் கிரமமான பொது ஆலோசனைகளில் சனசமூக சபைகள் பங்குபற்றி, பிரதேச சபையின் முக்கியமான அலுவல்களை நிருவகிப்பதில் சனசமூக உள்ளீடுகளைப் பிரதேச சபைக்கு வழங்குகின்றன. சனசமூகத்தின் வெளிப்படுத்தப்பட்ட தேவைகளுக்கு அமைவாக பணியாற்றுவதற்கு பிரதேச சபைகளுக்கு இந் நடைமுறை உதவியளித்துள்ள அதேவேளை, சகல அமைப்புக்களிலும், அதாவது நிபுணத்துவம், சரீரஉழைப்பு, சாதனங்கள், வரிகளின் நேரகாலத்திற்கான கொடுப்பனவு, நிதி, ஆகியவற்றில் சனசமூக உள்ளீடுகளைப் பெறுவதுடன், ஆதரவு திரட்டுதல் போன்ற சவால்களுக்கும் இணைந்து முகம்கொடுக்கின்றன.

மாத்தளை மாநகர சபை - முழு மாநகர பகுதியையும் அடக்கி 2009இல் 15 "பிரஜைகள் சபைகளை" தாபித்தது. புறம்பான அரசியலமைப்பொன்றின் கீழ் ஒவ்வொரு பிரஜைகள் சபையும் சுதந்திரமாக இயங்குகின்றன. பிரஜைகள் சபைகளின் ஆளுனர் சபையின் உறுப்பினர்கள் பெரும்பான்மையானோர் பிரஜைகள் சபைகளின் உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படுகின்ற அதேவேளை, சனசமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட குழுக்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக ஒரு சிலர் மாநகர முதல்வரினால் (மேயர்) நியமிக்கப்படுகின்றார்கள். பிரஜைகள் சபைப் பகுதியொன்றினுள் வாழும் மாத்தறை மாநகர சபையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பிரஜைகள் சபையுடன் பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

மாநகரப் பகுதியில் அபிவிருத்தியினதும், ஆட்சியினதும் ஆரம்பநிலையிலான அலகுகளாக பிரஜைகளை மாத்தறை மாநகர சபை கருதுகின்றது. பிரஜைகள் சபைகளுடனான ஆலோசனையுடன் 2010 வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தின் தயாரிப்பினை மாத்தறை மாநகர சபை ஆரம்பித்தது.

## Citizen Participation and Citizen Charter Experiences

### பிரஜைகள் பட்டயம்

"தமது நடவடிக்கைகளுக்கான பொறுப்புக்களை அதிகாரத்தைக் கொண்டுள்ளவர்களின் கடப்பாடுகளாக பொறுப்பினை வரையறுக்க முடியும்." அரசியல், நிருவாக, நிதி அல்லது அதிகாரத்தின் வேறு அமைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளவர்களையே ஷஅதிகாரத்தைக் கொண்டுள்ளவர்கள்' என்ற பதம் குறித்துரைக்கின்றது. அவர்கள் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும், அரசாங்க (மத்திய, மாகாண மற்றும் உள்ளூர்), தனியார் கூட்டுத்தாபனங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத் தாபனங்கள் ஆகியவற்றில் உள்ள நிருவாகத்தினரையும் உள்ளடக்குகின்றனர். "நகரத்திற்குரிய அலுவல் மீது தங்கியுள்ள கட்டிட பொறுப்பினை நோக்கிய அணுகுமுறையொன்றே சமூகப் பொறுப்பாகும்." நோக்குகளைக் கட்டுவதில், முன்னுரிமைகளைக் குறித்துரைப்பதில் அல்லது பொறுப்பினை நிர்ப்பந்திப்பதில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண பிரஜைகளும், சிவில் சமூகத் தாபனங்களும் பங்கெடுக்கின்றன. அரசாங்கத்தினால், பிரஜைகளினால் அல்லது ஒத்துழைப்புடன் செயற்படும் அரசாங்கத்தினாலும், பிரஜைகளினாலும் சமூகப் பொறுப்புப் பொறிமுறைகள் ஆரம்பிக்கப்பட முடியும். "உள்ளூராட்சியின் சம்பந்தத்தில், பரந்த வீச்செல்லையிலான நடவடிக்கைகளையும், பொறிமுறைகளையும் மற்றும் கருவிகளையும் சமூகப் பொறுப்பு குறித்துரைக்கின்றது." பிரஜைகள் பட்டயம் ஒரு சக்திமிக்க பொறிமுறையும், கருவியுமாகும்.

பலவீனமான ஷகுரல்களைக்' கொண்டவர்கள் உட்பட உள்ளூர் பிரஜைகளின் தேவைகளுக்கும், விருப்புகளுக்கும் உள்ளூராட்சி சபைகளின் பதிலிறுப்புத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஆற்றலளவை சமூகப் பொறுப்பு கொண்டுள்ளது. இவ்வாறாக அரசாங்கத்தின் பயனுறுதிவாய்ந்ததன்மையையும், ஜனநாயகப் பெறுமதியையும் உயர்த்துகின்றது. பிரஜைகளுடன் கிரமமான தொடர்பில் உள்ள அரசாங்கங்கள் உள்ளூர் நிலைமைகள் பற்றி அதிகளவு செம்மையான தகவலுக்கான அடைதலைக் கொண்டிருப்பதுடன், அவற்றின் தேவைகளுக்கு பதிலிறுப்பதற்கு நன்றாகவே இயலக்கூடிய நிலையில் உள்ளன. இலங்கையின் சனசமூகங்களில் ஏற்கனவே பரந்த வீச்செல்லையைக் கொண்ட சமூக பொறுப்பு பொறிமுறைகள் உள்ளன. இவற்றில் சில "பாரம்பரியமானவை" அத்துடன் "தாயகத்தில் உருவாக்கப்பட்டவை"இ ஏனையவை "நவீனமானவை", அனேகமாக வெளிநாடுகளிலிருந்து இரவல் பெறப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை விநியோக முறைமைகளின் நாளாந்தப் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதற்காக ஐக்கிய ராஜ்யத்தில் பிரதமர் மார்கிரெட் தட்சரின் அரசாங்கத்தின் போது சிவில் சமூகத்தின் பலதரப்பட்ட அக்கறையிலான குழுக்களின் பங்களிப்புடன் 1980களில் பிரஜைகள் பட்டயத்தின் கருத்துரு முதலில் உருவாக்கப்பட்டது. இது பிரதமர் ஜோன் மேஜரின் ஆட்சியின் போது அவரால் பிரசித்தப்படுத்தப்பட்டது. இது அரசாங்கச் சேவையின் நியமங்களை உயர்த்துவதற்கான முன்மொழிவுகளைக் கொண்டிருந்தது. 1990களின் போது இக் கருத்து ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளினாலும் பின்பற்றப்பட்டது. இது தொடர்பில் கடந்த இரு தசாப்தங்களின் போது ஆயிரக்கணக்கான ஷபிரஜைகள் பட்டயங்களை' உருவாக்கியதன் மூலம் குறிப்பிடத்தக்க சாதனைகளை இந்தியா ஆற்றியுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களினால் அளிக்கப்பட்ட நகரத்திற்குரிய சேவைகளின் பதிலிறுப்புத்தன்மையையும், பொறுப்பினையும் உயர்த்துவதற்கான அர்ப்பணிப்புடன், பங்கெடுப்பிலான ஆட்சியின் அமுலாக்கத்திற்காக பயனுறுதிவாய்ந்த கருவியொன்றாக உள்ளூராட்சியின் நிருவாக முறைமைக்கு பிரஜைகளின் பட்டயமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது.

தாபனத்தில் நோக்கு மற்றும் செயற்பணியின் கூற்று, சேவை வழங்குனரினால் வழங்கப்படும் சேவைகளின் விபரங்கள், புறம்பாக பயன்படுத்துவோரினதும், வாடிக்கைக் குழுக்களினதும் ஒவ்வொரு வகுதிக்கும் ஏற்ப நியமங்கள், தரம், நேர வரைச் சட்டம் என சேவைகளின் கூற்று, மற்றும் எங்கு, எவ்வாறு சேவைகள் வழங்கப்படுகின்றன என்பனவற்றை பிரஜைகள் பட்டயத்தின் மூலக்கூறுகள் உள்ளடக்குகின்றன. இது பிரஜைகளின் உரிமைகளையும், பொறுப்புக்களையும் அத்துடன் சேவைகளின் விநியோகத்தில் நியமங்களில் இருந்து விலகிச்செல்லும் வேளையில் பிரஜைகளுக்கு கிட்டுகின்ற தீர்வுகள் என மனக்குறைக்கு நிவாரணமளிக்கும் முறைமையொன்றையும், சுதந்திரமான கணக்காய்வையும் மற்றும் மதிப்பாய்வையும் பட்டயமொன்று உள்ளடக்கக்கூடும்.

இது அதிகாரத்தைக் கொண்டுள்ளவர்களுக்கும், சாதாரண பிரஜைகளுக்கும் இடையில் இடைவெளிகளை நிரப்புவதற்கான நடைமுறையொன்றையும், பொறிமுறையொன்றையும் உருவாக்குகின்றது என்பதே பிரஜைகள் பட்டயமொன்றின் மிகவும் முக்கியமான நன்மையாகும். இது தீர்மானமெடுப்பதிலும், அமுலாக்கத்திலும் பயனுறுதிவாய்ந்ததாகப் பங்கெடுப்பதற்கு பிரஜைகளையும், வேறு பங்காளர்களையும் அனுமதிக்கின்றது. இது அதிகாரத்தைக் கொண்டுள்ளவர்களினதும், பிரஜைகளினதும் சார்பாக ஒளிவு மறைவின்மையையும், பொறுப்பினையும் கோரிநிற்கின்றது. இக்கருத்தில் பரஸ்பரத்திலான உரிமைகள், கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் ஆகியவற்றினால் பிரஜைகளையும், உள்ளூராட்சியையும் பிரஜைகள் பட்டயமொன்று பிணைப்பதுடன், உள்ளூராட்சி முறைமைகளின் செயற்பாட்டில் சேவை விநியோக முறைமைகளில் திருந்திய செயற்றிறனுக்கான இடமொன்றையும் உருவாக்குகின்றது. இலங்கையின் ஒரு சில தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பிரஜைகள் பட்டயத்தின் தாயகத்தில் உருவாக்கப்பட்ட முன்னெடுப்புக்கள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

## பாத்ததும்பர பிரதேச சபை

### பின்னணி

மத்திய மாகாணத்தில், மத்திய மலைகளின் தலைநகரமான கண்டியிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் பாத்ததும்புர பிரதேச சபை அமைந்துள்ளது. இப் பகுதி கமத்தொழிலை முதன்மையாகக் கொண்டுள்ளதுடன், நெல், மற்றும் தேயிலைச் செய்கை, வேறு வர்த்தகச் செய்கை, மற்றும் சில்லறை, மொத்த வியாபாரம் ஆகியவற்றின் மீது மக்களின் வாழ்வாதாரங்கள் தங்கியுள்ளன.

பாத்தும்புரவில், பிரதேச சபையினதும், பிரதேச செயலாளரினதும் (கிராம மட்டம் வரை அவரது உத்தியோகத்தர்களின் வலைப்பின்னல் நீடிக்கின்றது) ஒன்றின் மீது மற்றொன்று படிந்திருக்கும் பணிகள் அடிக்கடி மோதலுக்கு இட்டுச் செல்கின்றன. மேலதிகமாக, பிரஜைகளுக்கும், பிரதேச சபைக்கும் இடையில் கணிசமானளவு இடைவெளி உள்ளது. தமது அபிவிருத்தித் தீர்மானங்களில் தெரிவு செய்யப்பட்ட சபை உறுப்பினர்கள் பிரஜைகளுடன் கலந்தாய்வதில்லை. இது பிரஜைகளுக்கும், பிரதேச சபைக்கும் இடையில் நம்பிக்கையீனத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைகள்

கட்சி அரசியலின் காரணமாக சபை உறுப்பினர்கள் பிளவுபட்டிருந்ததுடன், தமது வகிபங்கினையும், பொறுப்புக்களையும் இட்டு சரியான புரிந்துணர்வையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. போதியளவு தகவலைப் பிரஜைகள் கொண்டிருக்கவில்லை என்பதுடன், எந்தச் சேவைகளுக்கு அவர்கள் உரித்தானவர்கள் என்பதையிட்டும், பிரதேச சபையினால் எவை கிட்டச்செய்யப்பட்டுள்ளன என்பதையிட்டும் அறிந்து வைத்திருக்கவில்லை. கிட்டுகின்ற சேவைகள் பற்றி அவர்கள் அறிந்துவைத்திருந்த போதும் கூட, அவற்றை எவ்வாறு அடைவது என்பதை அறிந்து வைத்திருக்கவில்லை. பிரதேச சபைக்கும், பிரிவுச் செயலாளர், வியாபார சனசமூகம் போன்ற வேறு பங்காளர்களுக்கும் இடையில் இடைவெளி இருந்தது. பகுதியை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த முயற்சி இருக்கவில்லை.

பிரதேச சபையின் கடமைகளின் உத்தியோகபூர்வ பட்டியலுக்கான அடைதலை பிரஜைகள் கொண்டிருந்தார்கள். ஆனால், இவை அக்கறையுடன் எடுக்கப்படவில்லை எனக் கருத்து வெளியிட்டனர். வட்டார முறைமை ஒழிக்கப்பட்டிருந்தமையினால், பிரஜைகளின் பிரதிநிதித்துவத்தையிட்டு தெளிவான முறைமை இருக்கவில்லை. சனசமூகத்திலிருந்து உள்ளீடு இன்றி முன்னுரிமையை அமைத்தல், திட்டமிடுதல், மற்றும் வரவு செலவுத் திட்டமிடுதல் ஆகியவற்றைப் பிரதேச சபை மேற்கொண்டது.

நடைமுறை

2008இல் தொழில்நுட்ப நிபுணர்களினால் நடத்தப்பட்ட தொழில் முன்னிலைப்படுத்தல் திட்டமொன்றிலும், தலைவரும், பணியாள் உறுப்பினர்களும் பங்கெடுத்தனர். இதேவேளை, பிரஜைகள் பட்டய நடைமுறையொன்றை ஆரம்பிப்பதற்கான சிபார்சுடன் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து வழிகாட்டலை பிரதேச சபை பெற்றது. □உள்ளூராட்சி சபைகளுக்கு பிரஜைகள் பட்டயத்திற்கான வழிகாட்டல்□ என்ற கையேட்டினை ஆசிய மன்றம் வழங்கியது. ஆலோசனைக் குழுவொன்றையும், குவியப் புள்ளி வசதிப்படுத்துனர்களையும் தெரிவு செய்வதன் மூலம் நடைமுறையை ஆரம்பிப்பதற்கு கையேட்டினை முக்கியமான பணியாள் உறுப்பினர்களும், தலைவரும் பயன்படுத்தினர்.

பிரஜைகள் குழுக்களுடனும். தலைவர்களுடனும் பிரஜைகள் பட்டயத்தின் கருத்துக்களையும், அடிப்படைத் தத்துவங்களையும் பிரதேச சபை பரிமாறிக் கொண்டது. உள்ளூர் தரப்புக்கள் மத்தியில் அமைதியான இணக்கத்திற்கான வாய்ப்பொன்றாகவும், பிரஜைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான மிகவும் பயன்மிக்க வழியொன்றாகவும் பிரஜைகள் பட்டயம் நோக்கப்பட்டது. நடைமுறையின் அங்கமாக, முன்னைய தவறுகளைப் பிரதேச சபை ஏற்றுக்கொண்டதுடன், அவற்றைத் திருத்துவதற்கான தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தியது.

மூலோபாயங்களும், பொறிமுறைகளும்

□ ஆலோசனைக் குழு - இது பிரதேச சபைப் பணியாளர், சபை உறுப்பினர்கள், சிவில் சமூகத் தாபனங்கள், வியாபாரச் சனசமூகங்கள், சமயக் குழுக்கள், பெண்கள் குழுக்கள், இளைஞர் மற்றும் சிரேட்ட பிரஜைகள், இளைப்பாறிய அரசாங்க சேவையாளர்கள், சீவியத்தொழில் புரிபவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சனசமூகம் ஆகியோரை ஆகியவற்றை உள்ளடக்குவதற்காகத் தாபிக்கப்பட்டது. ஏதாவது தகவலைக் கோருவதற்கும். ஏதாவது செயற்பாட்டின் செல்லுபடிதன்மையையும், செம்மையையும் சரிபார்ப்பதற்கும் ஆலோசனைக் குழு முனைவுபடுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது. பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறையின் ஆரம்பத்திற்கு ஆதரவளிப்பதற்காக ஆலோசனைக் குழுவின் ஆரம்பப் பணிகள் ஆதரவளித்தன.

□ வசதிப்படுத்துனர்களாக குவியப் புள்ளி உத்தியோகத்தர்கள் - பிரஜைகள் பட்டயத்தைத் தயாரிப்பதற்காகவும், அமுல்படுத்துவதற்காகவும் பங்கெடுப்பிலான நடைமுறையொன்றை ஆரம்பிப்பதற்காக பெருமளவு குவியப் புள்ளி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டார்கள். செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும், நடைமுறையைத் தடம் பதிப்பதற்கும் அத்துடன் சபையினால் பிரஜைகள் பட்டயம் அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் வசதிப்படுத்துனர்கள் பொறுப்பாளிகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ விழிப்பியலைக் கட்டியெழுப்புதல் - பிரதேச சபையின் ஆற்றலளவையும், மூலவளங்களையும் பிரஜைகளுக்கு அறிவிப்பதற்காக ஆரம்பக் கட்டத்தில் ஆலோசனைக் குழுக்களினாலும், நிருவாகப் பணியாளரினாலும், சபை உறுப்பினர்களினாலும், பிரஜைகளின் பிரதிநிதிகளினாலும் விழிப்பியல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

நடைமுறையிலான மட்டுப்படுத்தல்கள் மீது விழிப்பியல் திட்டங்கள் பிரஜைகளைப் போதித்தன. பிரதேச சபையினால் ஏற்கனவே கையாளப்பட்ட சேவைகளையும், தற்போது வழங்கப்படும் சேவைகளின் நியமங்களையும் மற்றும் மேம்படுத்தல்களுக்கான சாத்தியமான துறைகளையும் அடையாளங் காண்பதற்கு குழுவை இச் செயற்பாடு இட்டுச் சென்றது. நடைமுறையிலான இடைவெளிகளைச் சரிக்கட்டுவதற்கு பங்களிப்பதற்கான அவற்றின் தகுதிகளையும், இணக்கத்தையும் முனைவுபடுத்துவதற்கு பிரஜைகளுக்கும், பங்காளர் முகவராண்மைகளுக்கும் வாய்ப்பொன்றை இது வழங்கியது.

☐ இணைப்பினை முன்னேற்றுதல் - அதன் அதிகாரத்தின் பகுதியினுள் செயற்படும் 30 சனசமூக அடிப்படையிலான தாபனங்களை பிரதேச சபை முறைமையாக அங்கீகரித்துள்ளது. இது கிராம மட்டத்தில் பயன்மிக்க தொடர்பாடலுக்கான இணைப்புக்களை விஸ்தரித்துள்ளது.

☐ தன்னிச்சையிலான முயற்சிகளை ஈர்த்தெடுத்தல் - உள்ளர் தொண்டர்களை பிரதேச சபை ஒழுங்குபடுத்தி, ஒருங்கிணைத்தது. முன்னணிவாய்ந்த தொண்டர் தாபனமென்று தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு உள்ளர் பிரிவிலும் தொண்டர்களை ஒருங்கிணைக்கும் படியும், 52 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைப் பிரதிநிதிப்படுத்தும் தொண்டர்களின் வலைப்பின்னலொன்றை அடையாளங் காணும்படியும் கோரப்பட்டது. பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒன்றிணைத்தல் குழுவொன்றைத் தாபிக்குமாறு தொண்டர்களின் தலைமைத் தொண்டர் கோரப்பட்டார். பிரதேச சபைக்கு உதவியளிப்பதற்காகவும், ஆதரவளிப்பதற்காகவும் 30 சனசமூக அடிப்படையிலான குழுக்களின் வலைப்பின்னலொன்றை அமைப்பதில் இது முடிவடைந்தது. எனினும், தொண்டர் உறுப்புக்கள் பிரதேச சபையின் சார்பில் செயற்படுவதற்கான அங்கீகாரத்துடனும், சட்ட அதிகாரத்துடனும் பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்தது. இதற்கு பதிலிறுப்பாக, கிராம மட்டத்தில் தொண்டர் உறுப்புகளுக்கு அதிகாரத்தை ஒப்படைக்கும் அதிகாரக் கடிதமொன்றை பிரதேச சபை வழங்கியது. (உதாரணம்: கண்காணித்தலும், அறிக்கையிடுதலும்).

☐ பொதுமக்களின் கருத்துகளுக்கு பங்கிடப்பட்ட பிரஜைகள் பட்டயம் - பன்னிலையிலானதும், தகுதியானதுமான குழுவொன்றைப் பிரதிநிதிப்படுத்தும் பிரஜைகள் பட்டய வரைவுக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. முதலாவது வரைவைத் தயாரிப்பதில் குழுவுக்கு ஆதரவளிக்கப்பட்டது. சனசமூக அடிப்படையிலான குழுக்கள் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட குழுக்கள் ஆகியன உட்பட பலதரப்பட்ட பங்காளர்களுக்கு வரைவுப் பட்டயத்தின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன.

☐ பிரஜைகள் குழுக்களினால் கண்காணித்தல் - முன்னுரிமையிலான அபிவிருத்தி முயற்சிகளுக்காக பிரஜைகள் குழுக்கள் தாபிக்கப்பட்டன.

☐ பிராந்திய மொழிகள் - பொதுவாக சிங்களத்திலும், தமிழிலும் பிரஜைகள் பட்டம் தொடர்பான கருத்துப்பரிமாறல்கள் நடைபெற்றன. பட்டயத்தின் வழிகாட்டல்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மற்றும் தமிழிலும் கிட்டச்செய்யப்பட்டன.

## முடிவுகள் மற்றும் நன்மைகள்

☐ பிரதேச சபையின் தொழிற்பாடுகளுக்கு பொதுமக்கள் அதிகளவு பாராட்டுதலைத் தெரிவித்தனர்.

☐அண்மைய மாதங்களின் போது அங்கீகரிக்கப்படாத நிருமாணங்களின் வீழ்ச்சியினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, பிரதேச சபையின் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுவதற்கு பிரஜைகள் ஆரம்பித்துள்ளனர்.

☐ மயானங்களையும், நல்லடக்க பூமிகளையும் மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் மரணச்சடங்கு உதவி சங்கங்களுக்கு பிரதேச சபை ஊக்கமளித்துள்ளதுடன், அவற்றை அங்கீகரித்துமுள்ளது.

☐ பங்காளர்கள் தற்போது பெருமளவு பராமரிப்புச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்கின்றனர். உதாரணமாக, மயானங்களினதும், உட்கட்டமைப்பு வசதிகளினதும் பராமரிப்புச் செயற்பாடுகளை பொறுப்பேற்பதற்கான தமது இணக்கத்தினை பெருமளவு கிராமசேவை உத்தியோகத்தர்களும், பிரிவுச் செயலாளர் பணியாளரின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களும் வெளிப்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ பொது மக்கள் பதிலிறுப்பு முறைமையொன்று விருத்தி செய்யப்பட்டு, தொழிற்படுத்தப்பட்டது. இதனால், பொது மக்களின் மனக்குறைகளையும், முறைப்பாடுகளையும் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச சபை அலுவலகம் நாள் முழுவதும் திறந்திருந்தது.

□ மாவட்ட மற்றும் பிரிவு செயலளர்களுடன் சிறந்த உறவொன்று தாபிக்கப்பட்டது.

□ ஆலோசனை நடைமுறையின் போது நெல் கமக்காரர்களின் குழுவொன்று விதை நெல்லின் திருந்திய இனங்களுக்கும், கமத்தொழில் செய்கருவிகளுக்கும், உரங்களுக்கும் மற்றும் கம இரசாயனங்களுக்குமான கடன்களுக்கும், கம உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளுக்குமான தமது தேவையை முனைவுபடுத்தியது. கிராமிய வீதிகள், மதகுகள் மற்றும் பொது மயானங்கள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பின் பராமரிப்புக்கு பொறுப்பாக இருப்பதற்கு பிரதேச சபைக்கு தமது ஆதரவையிட்டு அவர்கள் வாக்களித்தார்கள். இக் கருத்துப்பரிமாறல்களின் அங்கமாக, விதை நெல் உற்பத்திக்கு செய்துகாட்டல் காணித் துண்டொன்றை ஆரம்பித்து வைப்பதில் பிரதேச சபைக்கு கமத்தொழில் திணைக்களம் ஆதரவளித்தது. இது பிரதேச சபையின் பாரிய தொழிற்பாடொன்று அல்ல என்ற போதிலும், இது உள்ளூர் கமக்காரர்களுக்கு பிரசித்தமான திட்டமொன்றாகும்.

கற்கப்பட்ட பாடங்களும், நிலைத்திருக்கும் தன்மையும்

பிரஜைகள் பட்டயம் வழிகாட்டல் தத்துவங்களை இயக்குவதைக் குறித்துரைக்கின்றது. போதியளவு உள்ளூர் பங்களிப்புகளுடன் கமநெகும மற்றும் மகநெகும அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் செயற்பாடுகளை அமுலாக்குவதற்கு பிரதேச சபையினால் இயலக்கூடியதாகவிருந்தது. பிரதேச சபையினால் முடிக்கப்பட்ட பெருமளவு செயற்பாடுகள் அமுலாக்கல் மட்டத்தில் முகங்கொடுக்கப்பட்ட க்டங்களினதும், சவால்களினதும் காரணமாக பிரிவுச் செயலாளரினால் ஏற்கனவே கைவிடப்பட்டிருந்தன. பிரதேச சபை நிதானமாக முன்னேறுவதற்கு பிரஜைகள் பட்டய நடைமுறை இயலச்செய்தது.

நிதி, மற்றும் கொள்கை, தொழில்நுட்பச் சேவைகள், வீடமைப்பு மற்றும் சனசமூக முன்னேற்றம், சூழல் மற்றும் சுகாதாரம் மற்றும் பொதுவசதிகள் போன்ற பிரதேச சபையின் செயற்குழுக்களினுள் பிரஜைகளின் பிரதிநிதிகளின் ஒன்றிணைப்பானது இணைந்த தீர்மானமெடுத்தலை வசதிப்படுத்தியுள்ளது. பிரஜைகளின் பிரதிநிதிகள் வேறுபட்ட சீவியத்தொழில்களிலிருந்தும், ஒழுக்காறுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்படுகின்றனர். இதனால் குழுக்களின் திறன்களும், ஆற்றலளவுகளும் உயர்த்தப்படுகின்றன. அத்துடன் பிரஜைகளின் உள்ளீடுகள் நிறுவகரீதிப்படுத்தப்பட்டுள்ளன. இது ஒளிவுமறைவின்மையையும், பொறுப்பினையும் பராமரிப்பதற்கு பிரதேச சபைக்கு மேலதிகமான பலத்தை வழங்குகின்றது.

**புத்தளம் பிரதேச சபையின் அனுகூலம்**

பின்னணி

புத்தளம் மாநகரப் பகுதியிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் மதுரங்குளியில் புத்தளம் பிரதேச சபை அமைந்துள்ளது. கமத்தொழில், மீன்பிடித்தல், உப்பளங்கள், இறால் வளர்ப்பு மற்றும் உல்லாசப்பயணம் ஆகியவற்றுக்கான ஆற்றலளவுடன் வளமான கரையோரப் பிராந்தியத்தில் பிரதேச சபை அமைந்துள்ளது.

பிரச்சனைகள்

உள்ளூர் அபிவிருத்திக்கு பயன்மிக்கதாக ஒத்துழைப்பதற்கு புத்தளம் பிரதேச சபையில் உள்ள நிருவாகத்தினரும், சபை உறுப்பினர்களும் அபூர்வமாகவே இயலக்கூடிய நிலையில் விளங்கினார்கள். மேலதிகமாக, சனசமூகப் பங்கெடுப்பின் நன்மைகளையிட்டு சபை உறுப்பினர்கள் அறிந்துவைத்திருக்கவில்லை. அவர்கள் தீர்மானமெடுப்பதில் பிரஜைகளைச் சம்பந்தப்படுத்துவதற்கு பொறிமுறை அல்லது நடைமுறை இருக்கவில்லை என்பதுடன், அவர்களுக்கு கிட்டுகின்ற சேவைகளையிட்டு பிரஜைகள் அறிந்து வைத்திருக்கவுமில்லை. பிரஜைகளின் உள்ளீட்டுக்காக இருந்த நடைமுறைகள் அடைவதற்கு மிகவும் க்டமாகவே இருந்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உறுப்பினர்களில் பிரஜைகள் சிறிதளவு நம்பிக்கையையே கொண்டிருந்ததுடன், தமது அலுவலகத்திலிருந்து இலாபத்தை ஈட்டுவதே அவர்களின் ஒரேயொரு நிகழ்ச்சி நிரலாக விளங்கியதாக பிரஜைகள் நம்பினர். உண்மையில் உறுப்பினர்கள் சனசமூகத்தில் தமக்குள்ள வகிபங்கினையும், பொறுப்புக்களையும் இட்டு சரியான புரிந்துணர்வொன்றைக் கொண்டிருக்கவில்லை. பிரதேச சபைக்கும், பிரிவுச் செயலாளருக்கும், வியாபாரச் சனசமூகத்திற்கும் இடையில் இடைவெளியொன்று இருந்தது. மதுரங்குளியின் வியாபார சனசமூகத்திலிருந்து பிரதேச சபைக்கு வருமானத்தின் பிரதான மூலம் வந்தது. இருந்தும் பிரதேச சபையிலிருந்து சிறிதளவு கவனத்தையும், ஆதரவையும் இச் சனசமூகம் பெற்றது.

## நடைமுறை

தொழில்நுட்ப நிபுணர்களினாலும், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினாலும் வசதிப்படுத்தப்பட்ட விழிப்பியல் கூட்டமொன்றில் பிரதேச சபைக்கு பிரஜைகள் பட்டயத்தின் கருத்துரு முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிய மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டியொன்றின் உதவியுடன் பிரஜைகள் பட்டயமொன்றுக்காக சனசமூகத்தின் நோக்கத்தினைத் திட்டமிடுவதன் மூலம் இந் நடைமுறையை பிரதேச சபை ஆரம்பித்தது. பிரஜைகள் பட்டயத்தை ஆரம்பிப்பதற்கு கிட்டுகின்ற பயனுள்ள கருவிகளையும், மூலோபாயங்களையும் இவ்வழிகாட்டி விபரிக்கின்றது. மேலதிகமாக, உள்ளூரில் கிட்டுகின்ற சேவைகளைப் பட்டியல்படுத்துமாறும், பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தல் வரைபடமொன்றை முடிக்குமாறும் வட மேல் மாகாண சபையின் ஆணையாளர் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தார். பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறையை ஆரம்பிப்பதற்கு இச் செயற்பாடுகள் உதவியளித்தன.

தெரிவுசெய்யப்பட்ட சபை உறுப்பினர்கள், பிரதேச சபைப் பணியாளர் மற்றும் வர்த்தகச் சங்கத்தினதும், சிவில் சமூகத் தாபனங்களினதும் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட விழிப்பியல் செயலமர்வொன்றை நடத்துவதற்கு தொழில்நுட்ப ஆலோசகர்களுக்கு பிரதேச சபை அழைப்புவிடுத்திருந்தது. பிரதேச சபையினதும், சனசமூகத்தினதும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதில் பிரஜைகள் பட்டயத்தின் நன்மைகளையிட்டு இச் செயலமர்வு விளக்கமளித்தது. குறிப்பாக, பட்டயம் வெற்றியடைவதற்காக சகல பங்காளர்களுக்கும் இடையில் ஒத்துழைப்பினதும், கூட்டுமுயற்சியினதும் முக்கியத்துவத்தை செயலமர்வு முனைவுபடுத்தியது. பிரதேச சபைக்கு வெளியே கூட்டுமுயற்சிகளுக்கு மேலதிகமாக, சபை உறுப்பினர்கள் மத்தியில் ஒத்துழைப்பு, பிரதேச சபைப் பணியாளரின் ஒற்றுமை, மற்றும் சபை உறுப்பினர்களினதும், பணியாளரினதும் கூட்டு முயற்சிகள் ஆகியன பட்டயத்தை உருவாக்குவதற்கு முக்கியமானதாகும். இலங்கையின் வேறு சனசமூகங்களிலிருந்தும், பிராந்தியத்தின் நாடுகளிலிருந்தும் ஒரு தொடரான வெற்றிக் கதைகள் பயன்படுத்தப்பட்டன

## மூலோபாயங்களும், பொறிமுறைகளும்

☐ மீன்பிடித்தல் சங்கங்கள், கமக்காரர் தாபனங்கள், கிராமியக் கடன் சங்கங்கள், பெண்கள் தாபனங்கள், வர்த்தகர் சங்கங்கள், சூழல் சபைகள், மரண சகாயநிதிச் சங்கங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மற்றும் நீர் பாவனையாளர் குழுக்கள் ஆகியன உட்பட பங்காளர்களின் ஆதரவாளரைப் பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறைக்காக பிரதேச சபை ஒன்றுதிரட்டியது.

☐ பிரதேச சபைப் பணியாளரின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும், மூன்று சபை உறுப்பினர்களையும், மற்றும் மீன்பிடித்தல் சங்கங்கள், வியாபாரச் சனசமூகம், சமயக் குழுக்கள், பெண்கள் குழுக்கள், இளைஞர், முச்சக்கர வாகனச் சாரதிகள், மற்றும் சிரேட்ட பிரஜைகள், இளைப்பாறிய அரசாங்கச் சேவையாளர்கள், சீவியத்தொழில் புரிபவர்கள் மற்றும் பாடசாலைச் சனசமூகம் ஆகியோரை..ஆகியனவற்றைப் பிரதிநிதிப்படுத்தும் ஐம்பது ஒன்றிணைந்த ஆலோசனைக் குழுவொன்றை பிரதேச சபை தாபித்தது. பிரஜைகள் பட்டய நடைமுறையை ஆரம்பிப்பதில் ஆலோசனைக் குழு முனைவுபடுத்தப்பட்டு, ஆதரவளிக்கப்பட்டது. மேலதிகமான கூட்டங்கள் அவசியப்பட்டால் அன்றி, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொருமுறை குழு தற்போது கூடுகின்றது.

நடைமுறையை வழிகாட்டுவதற்கு பிரதேச சபை பணியாளரிலிருந்து ஒரு முக்கியமான வசதிப்படுத்துனர் தெரிவுசெய்யப்பட்டார். பெருமளவு இணை-வசதிப்படுத்துனர்களும் நியமிக்கப்பட்டதுடன், முடிவாக பிரஜைகள் பட்டயமொன்றின் தயாரிப்புக்கும், அமுலாக்கத்திற்கும் பங்கெடுப்பு நடைமுறையொன்றை வழிகாட்டுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ பிரதேச சபை பொறுப்பாகவுள்ள சேவைகளின் பட்டியலொன்று ஆலோசனைக் குழுவுக்கும், உள்ளூர் பிரஜைகளுக்கும் இடையிலான ஆலோசனைக் கூட்டமொன்றின் போது அடையாளங் காணப்பட்டது. சேவைகள் சரிவரப் பட்டியல்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டதுடன், ஒழுங்குபடுத்தல் திட்டமிடுதலில் பூர்த்தி செய்கின்ற முயற்சியொன்று பொறுப்பேற்கப்பட்டது. ஒழுங்குபடுத்தல் சேவைகளைப் பொறுப்பேற்பதற்கான புதிய அணுகுமுறைகளையிட்டு உடன்படப்பட்டது.

☐ நடைமுறையின் போது ஆலயங்கள், தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் வேறு சமய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்துள்ள சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் யாவற்றுடனும் ஆலோசனை நடத்தப்பட்டது. அதன் அதிகாரத்தின் பகுதியினுள் செயற்படுகின்ற இருபத்திரண்டு சனசமூக அடிப்படையிலான தாபனங்களை பிரதேச சபை அங்கீகரித்ததுடன், கிராம மட்டத்திலான சனசமூக அடிப்படையிலான தாபனங்களின் வலைப்பின்னலொன்றை விருத்தி செய்துள்ளது. புதுமாற்றத்திலான கருத்துக்களைத் தோற்றுவிப்பதற்காகவும், சனசமூகத்தில் தொடருகின்ற கலந்தாய்வின் ஊடாக தொடர்பாடல்களைப் பராமரிப்பதற்காகவும் இவ் வலைப்பின்னல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

☐ பட்டயத்தின் முதலாவது வரைவினைத் தயாரிப்பதற்காக பரந்தரீதியிலான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பிரஜைகள் பட்டய வரைதற் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் உட்பட பலதரப்பட்ட பங்காளர்களுக்கு வரைவின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. ஒன்றிணைப்பதற்காக பொதுமக்களின் கருத்துக்கள் அக்கறையுடன் எடுக்கப்பட்டன. இந்த ஆலோசனையின் புதிய பாரம்பரியத்திற்கு அமைவாக, அழுத்துகின்ற பிரச்சனைகளையிட்டு கருத்துப் பரிமாறுவதற்காகவும், சனசமூக தீர்வுகளுக்கான சாத்தியமான அணுகுமுறைகளுக்காகவும் சபை உறுப்பினர்களுடன் ஒவ்வொரு கிராமத்திற்கும் பிரதேச சபை நிருவாகத்தினர் தற்போது கிரமமாக வருகை தருகின்றார்கள்.

## முடிவுகளும், நன்மைகளும்

☐ உள்ளூர் சனசமூக அடிப்படையிலான தாபனங்களின் செயற்பாட்டுக்கு பிரஜைகள் பட்டயம் உருக்கொடுத்துள்ளது. உதாரணமாக, தாபனத்தின் நிறைவேற்றுக் குழு ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என தற்போது கோரப்படுகின்றது. சனசமூகத்துடன் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும், தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கும் புதியதொரு கருவியை தற்போது சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் கொண்டுள்ளன.

☐ திட்ட அமுலாக்கம் தற்போது அதிகளவு ஒளிவு மறைவற்றது. உதாரணமாக, வீதி நிருமாணத் திட்டத்தின் கீழ், நிதி மற்றும் தொழில்நுட்ப ஆவணங்களைக் கண்காணிப்பதற்கும், கிராமப் பிரதிநிதிகளும், சனசமூக அடிப்படையிலான தாபனங்களும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

☐ சனசமூக வேலைகளுக்கு சனசமூகப் பங்களிப்புகளைச் சனசமூகச் சம்பந்தம் அதிகரித்துள்ளது.

☐ மயானங்களிலும், நல்லடக்க பூமியிலும் பராமரிப்பு வேலைகள் பிரதேச சபைக்கு எவ்வித செலவுமின்றி, மரணச் சடங்கு உதவிச் சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டன.

☐வர்த்தக உத்தரவுப்பத்திரங்களின் பெறுமதி மீது வர்த்தகர்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட புரிந்துணர்வின் காரணமாக வழங்கப்பட்ட வர்த்தக உத்தரவுப்பத்திரங்கள் 400இலிருந்து 5,200க்கு அதிகரித்துள்ளன.

☐ சமூக சேமநலனுக்கும், பெண்களின் அதிகாரமளிப்புக்கும் வரவு செலவுத் திட்டத்திலான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. பால்நிலைப் பிரச்சனைகளையும், சூழலையும் சுற்றி கல்வி மற்றும் விழிப்பியல் திட்டங்களும் அத்துடன் குடும்ப நிதியங்களைச் சமாளிப்பதற்கு பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக கடன் திட்டமும் இருந்தன.

☐முறைப்பாடுகளைக் கண்காணிப்பதும், பதிவுசெய்வதுமான விரைவான பதிலிறுப்பு முறைமையொன்றின் ஊடாக பொதுமக்களின் முறைப்பாடுகள் கவனிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கப்பட்ட பாடங்களும், நிலைத்திருக்கும்தன்மையும்

பிரஜைகள் பட்டயத்துடன் இணைந்துள்ள குழுக்கள் பிரதேச சபையின் முகாமைத்துவ முறைமையின் முக்கியமான அங்கம் என்பதுடன், இவை பிரஜைகள் பட்டயத்திலும், ஆட்சி நடைமுறையிலும் தீவிரமான பங்கெடுப்பினை எடுப்பதற்காக பிரஜைகளுக்கும், அவற்றின் சிவில் சமூகத் தாபனங்களுக்கும் புதுமையானதொரு வாய்ப்பினை வழங்குகின்றன. சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன் பெரும்பாலான இக்குழுக்கள் அபிவிருத்தி முன்மொழிவுகளை மதிப்புரைக்கின்றன. இவ்வாறாக சனசமூக முன்னுரிமைகளையும், சிபார்சுகளையும் ஒன்றிணைக்கின்றன.

சேவை விநியோகத் திட்டங்களைப் பயன்மிக்கதாகவும், செயற்றிறனாகவும் செய்வதற்காக பிரதேச சபையுடன் பிரஜைகள் தற்போது நெருக்கமாகப் பணியாற்றுகின்றனர். பிரதேச சபைக்கும், அதன் பிரஜைகளுக்கும் இடையில் திருந்திய உறவுகளிலிருந்து வெளிப்படையான நன்மைகளே குறித்துரைக்கப்பட்ட அட்டவணையொன்றின் மீதான திருந்திய கழிவுச் சேகரிப்பும், நேரகாலத்திற்கான வரிக் கொடுப்பனவுகளும் விளங்குகின்றன. தொடர்பாடலை அதிகரிப்பதன் மூலமும், தப்பெண்ணங்களை அகற்றுவதன் மூலமும் பிரதேசச் சபை பணியாளரினதும், சபை உறுப்பினர்களினதும், மற்றும் பிரஜைகள் குழுவினரினதும் மறுதலையிலான போக்குகளை பிரஜைகள் பட்டயம் மாற்ற முடியும். பிரதேச சபையினதும், குழு முறைமையினதும் பரந்த நிகழ்ச்சி நிரலின் அங்கமொன்றாக பிரஜைகள் பட்டயம் அமைகின்றதுடன், அந்த அர்த்தத்திலேயே அது நிறுவனரீதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பிரஜைகள் பட்டயத்தின் ஊடாக திட்டமிடப்பட்ட மாற்றங்களைச் செய்தல் - இலங்கை - மட்டக்களப்பு மாநகர சபையினதும், காத்தான்குடி நகர சபையினதும் அனுபவம்**

1. மட்டக்களப்பு மாநகர சபை: கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாநகர பகுதி சிறு தீவுகளின் அழகுக்கு பிரசித்தமானது என்பதுடன், உவர் நீர் கடல் ஏரிக்கும், அவற்றை இணைப்பதற்காக குறுக்காகக் கட்டப்பட்ட பாலங்களினாலும் பிரதான நிலத்திலிருந்து மக்கள் புறம்பாக்கப்பட்டுள்ளார்கள். கல்லடி கடல் ஏரியில் பாடும் மீன்களுக்கும் இது பிரசித்தமானதாகும். மட்டக்களப்பு பிரிவுச் செயலாளர் பிரிவின் 48 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மாநகர சபை (7,509 ஹெக்டார்) உள்ளடக்குகின்றது. 25,000 குடும்பங்களைப் பிரதிநிதிப்படுத்தும் 90,000 மக்களை மொத்த சனத்தொகை கொண்டுள்ளது. மதிப்பீட்டு வரி சேகரிப்பு நோக்கத்திற்காக 19 பிரிவுகளாக மாநகர சபை பிரிக்கப்பட்டுள்ளது. மாநகர சபை 410 பணியாள் உறுப்பினர்களையும், 19 தெரிவுசெய்யப்பட்ட சபை உறுப்பினர்களையும் (18 தமிழர் மற்றும் 01 முஸ்லிம்) கொண்டுள்ளது. வருடாந்த வரவு செலவுத் திட்டம் ரூபா 230 மில்லியன் ஆகும்.

பிரச்சனைகளும், விவகாரங்களும்: மாநகர சபைக்கும், பிரஜைகளுக்கும் இடையிலான தோதான புரிந்துணர்வின்மையும், பரஸ்பர நம்பிக்கையின்மையுமே பாரிய பிரச்சனையாகும். புதிதாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் பாதுகாப்பு, போக்குவரத்து, வாழ்வாதாரங்கள், அரசியல் ஒற்றுமை, ஐக்கியம் மற்றும் பங்காளர்களின் ஒத்துழைப்பு, மூலவளத்தின் ஒதுக்கீடுகள், பிரஜைகளின் திருப்திக்கு ஏற்ப பயன்மிக்க சேவையின் ஏற்பாடு போன்ற பலதரப்பட்ட அம்சங்கள் தொடர்பான கண்ணுக்குத் தெரியாத பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறை: ஆசிய மன்றத்தினதும், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினதும், மற்றும் மாகாண சபைகளினதும் வழிகாட்டலுடன் பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறையை மாநகர சபை ஆரம்பித்தது. தொடர்பான பிரச்சனைகளினதும், பங்கெடுப்பிலான நடைமுறையினதும் நியாயமான புரிந்துணர்வொன்றை விருத்தி செய்வதற்காக விழிப்பியல் திட்டங்கள் நடைபெற்றன. உள்ளக ஆலோசனைக் கூட்டங்களையும், பிரஜைகள் ஆலோசனைகளையும் மாநகர சபை ஆரம்பித்ததுடன், திரட்டப்பட்ட கருத்துக்களை பிரஜைகள் பட்டயத்தில் ஒன்றிணைத்தது. இதனிடையே நடைமுறையிலான ஒழுங்குவிதிகளைத் திட்டமிட்டு ஆவணமொன்றை மாநகர சபை தயாரித்தது. இந்த ஆவணம் சகல கிட்டுகின்ற சேவைகளை பட்டியல்படுத்தியுள்ளதுடன், பிரஜைகள் பட்டயமொன்றை நோக்கி மேலும் நடவடிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடித்தளத்திற்கு வழிசமைத்தது. பணியாளருடன் அல்லது சபை உறுப்பினர்களுடன் பட்டயம் பரிமாறப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் கருத்துக்களுக்காக கிட்டச் செய்யப்பட்டுள்ளது. "பிரஜைகள் பட்டயத்தை" தயாரிப்பதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டது. பின்னர், பொதுமக்களின் கருத்துக்களைக் கோரி இந்த ஆவணத்தை மாநகர சபை காட்சிப்படுத்தியது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆவணத்தை மாநகர சபை மீள்பரிசீலனை செய்ததுடன், சம்பந்தப்பட்ட குழுக்களினால் வழங்கப்பட்ட கருத்துக்களை ஒன்றிணைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலோபாயங்களும், பொறிமுறைகளும்: வேறுபட்ட பங்காளர் குழுக்களுக்கு விழிப்பியலை உயர்த்துதல், உள்ளகக் குழுக்களை இளம் வசதிப்படுத்துனர்களுக்கு ஆதரவை நீடித்தல், பிரஜைகளுடனும், பங்காளர்களுடனும் ஆலோசனை நடத்துதல், அரசியல் தலைமைத்துவத்தின் சம்பந்தம், வியாபார சனசமூகத்தைக் கொண்டுள்ள செயல் குழுவின் பங்கெடுப்பு, வெற்றிகளையும், சிறந்த நடைமுறைகளையும் பார்ப்பதற்கு முக்கிய உத்தியோகத்தர்கள் வெளிப்படுதல் ஆகியனவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலோபாயங்கள் உள்ளடக்கியிருந்தன. சிரேட்ட பிரஜைகளுக்காக பிரஜைகள் நிலையமொன்றை மாநகர சபை ஆரம்பித்தது. ஆதலினால் மாநகர சபையுடன் அவர்களால் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடிவதுடன் பங்களிக்கவும் முடிகின்றது. அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களின் மீதும், சேவை விநியோகங்களின் தரத்தை மேம்படுத்துவது மீதும் ஆலோசனை வழங்க முடியும். நடமாடும் சனசமூக சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதனால் நடமாடும் சேவை இடம்பெற்ற இடத்திலேயே தலைதூக்கி நிற்கின்ற பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. இது மாநகர சபைப் பணியாளருக்கும், பிரஜைகளுக்கும் அறிவூட்டுகின்ற ஒரு நடைமுறையாகும். அவர்கள் நெருங்கிய உறவொன்றையும், ஒற்றுமை உணர்வையும் விருத்தி செய்து கொண்டனர். நடைமுறையிலான சட்டங்களையும், துணைச் சட்டங்களையும் மற்றும் கொள்கை தொடர்பான வழிகாட்டல்களினதும், மீட்டுரைத்தல் போன்ற மனப்பூர்வமான கருத்துப் பரிமாறல்களையும் தூண்டியுள்ளது. நிலையியற் குழுக்களினுள் பிரஜைகளை ஒன்றிணைக்கும் நன்மைகள் மீது திட்டமான கருத்துப் பரிமாறல்களை ஆலோசனைக் குழுக்களின் பங்கெடுப்பு வசதிப்படுத்தப்பட்டது. வேறுபட்ட பிரஜைகள் குழுக்கள் மத்தியில் ஒத்துழைப்பையும், ஒற்றுமையையும் மேம்படுத்துகின்ற புனித கீதமொன்றை மாநகர சபைக்காக மாநகர சபை தயாரித்தது. கிராம உத்தியோகத்தர் திட்டங்களை ஒன்றிணைக்கின்ற வழியாக நடுத்தர தவணைத் திட்டங்களைத் தயாரிக்கும் நோக்குடன் உள்ளூர் திட்டமிடல் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2. காத்தான்குடி நகர சபை: கிழக்கு மாகாணத்தில் பிரதான வியாபார மையமொன்றாக காத்தான்குடி நன்கு அறியப்பட்டுள்ளது. காத்தான்குடி பட்டினத்தில் நகர சபை அமைந்துள்ளது. நகர சபையானது 3.89 சதுர கி.மீ. கொண்ட பகுதியை அடக்கியுள்ளதுடன், 12,000 குடும்பங்களுக்கு அல்லது 76,000 மக்களைக் கொண்ட சனத்தொகைக்கு 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சேவையை வழங்குகின்றன. முழுச் சனத்தொகையுமே முஸ்லிம் சனசமூகமொன்றாகும். நகர சபை 120 ஊழியர்களைக் கொண்ட பணியாளரையும், 09 தெரிவுசெய்யப்பட்ட சபை உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. வருடாந்த வரவு செலவுத் திட்டம் ரூபா 68 மில்லியனாகும்.

பிரச்சனைகளும், விவகாரங்களும்: பலதரப்பட்ட காரணங்களின் நிமித்தம் பிரஜைகள் பட்டயமொன்றைத் தயாரிப்பதில் அதிவிசேடமான அக்கறையொன்றை நகர சபை எடுத்துள்ளது. இவை நகர சபையினதும், பிரஜைகளினதும் மத்தியில் நம்பிக்கையீனத்தை உள்ளடக்கியுள்ளன. பணியாளருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் ஐக்கியமும், ஒத்துழைப்பும் இருக்கவில்லை. பரஸ்பர புரிந்துணர்வுடன் அந்திமகால சேவை விநியோகப் பிரச்சனைகள் பரஸ்பர புரிந்துணர்வுடன் தீர்க்கப்படவில்லை. வருமானச் சேகரிப்பு நிலுவையாக விளங்கியதுடன், நகர சபையுடன் ஒத்துழைப்பதற்கு பிரஜைகள் தயங்கினார்கள்.

பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறை: உள் வீட்டுக் கருத்துப் பரிமாறல்களின் தொடரொன்று இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட தகவலை மாநகர சபையின் பிரிவுத் தலைவர்கள் வழங்கியுள்ளனர். இது நகர சபையின் கிட்டுகின்ற சேவைகளின் முறைமையான ஆவணப்படுத்தலை விளைவித்துள்ளதுடன், ஒழுங்குபடுத்தல் படவரைவு என்ற அமைப்பில் தீர்விலான முயற்சியைக் கண்டுள்ளது. குறிப்பான ஆகக்குறைந்த நேர மட்டுப்படுத்தலினுள் கிட்டுகின்ற சேவைகளை வழங்குவதற்கான வாக்குறுதியுடன் இச் சகல தேவைகளையும் இந்த ஆவணம் பட்டியல்படுத்தியுள்ளது. மேலதிகமாக, வரைவிலான பிரஜைகள் பட்டய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அமுலாக்கலுக்காக நகர சபை அதை அங்கீகரித்துள்ளது. பிரஜைகள் பட்டயத்தைத் தயாரிக்கையில், அவசியமான பயிற்சியைப் பெற்றிருந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் குவிய வசதிப்படுத்தல் வகிபங்கு ஆற்றப்பட்டது. பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறையில் ஆலோசனைக் குழுவும், செயல் குழு உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

மூலோபாயங்களும், பொறிமுறைகளும்: விழிப்பியலும், உள்ளகக் குழுக்களும், குவியப் புள்ளி வசதிப்படுத்தல்களின் பயிற்சியும் செயற்பாடுகளை ஆரம்பித்தன. தனியார்-அரசாங்கக் கலந்தாய்வுகள், செயல்குழுவை அமைத்தல், பொருளாதார ஆட்சி காட்டி மீதான விழிப்பியல், ஒழுங்குபடுத்தல் படவரைவுக்கும், கொள்கை ஆற்றுப்படுத்தலுக்கும் ஆதரவு ஆகியனவற்றை மூலோபாயங்கள் சிபார்சு செய்தன. வர்த்தகர் சங்கத்தை மீள் ஒழுங்குபடுத்துவதற்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய வாய்ப்புக்களையும், கருத்துக்களையும் நோக்குவதற்காக செயல்குழுக்களுக்கு வெளிப்படுத்தல் திட்டங்கள் கிட்டச்செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளும், நன்மைகளும்: பிரஜைகள் பட்டயத்தின் விளைவாக, முறைப்பாடுகளை முறைமையாகக் கையாள்தல் முடிவாக்கப்பட்டுள்ளதுடன், இது நிரப்புதல் முறைமையையும், துரித நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. பிரஜைகளிலிருந்து முறைப்பாடுகளை நகர சபை பெறுகின்ற போது, அவை பதிவேட்டில் பதியப்பட்டு, கரிசனைக்கும், தீர்மானமெடுப்பதற்கும் தலைவருக்கு அனுப்பப்படுகின்றது. பெரிதுமே 60%ஐக் கொண்ட முறைப்பாடுகள் உடனடியாகவே பதிலிறுக்கப்படுகின்றது. மேலதிகமான பொறுப்புக்களை பொறுப்பேற்பதற்கு நகர சபைப் பணியாளரை பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறை செயல்நோக்கமளிக்கின்றது. கிரமமான குழுக்கள் மீள்-உயிரூட்டப்பட்டு, நகர சபையில் செயற்பட வைத்தது. பள்ளிவாசல் சம்மேளனத்தினால் நிதிக் குழு பிரதிநிதிப்படுத்தப்படுகின்றது. திட்டமிடல், சூழல், தொழில்நுட்பம் மற்றும் நிருவாகம் போன்ற வேறு குழுக்களும் உள்ளன. இக் குழுக்கள் வேறுபட்ட மட்டங்களில் செயற்படுகின்றன. சபைக் கூட்டங்களை அவதானிப்பதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பொன்றுள்ளது.

3. கற்கப்பட்ட பாடங்களும், நிலைத்திருக்கும்தன்மையும்: வேறுபட்ட பங்காளர்களை ஒன்றாகக் கொண்டு வருவதற்கான புதுமாற்றத்திலான கருவியொன்றே பிரஜைகள் பட்டயமாகும். இது பணியாளரினதும், அரசியல் தலைவர்களினதும் மத்தியில் உள்ளகரீதியாக ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான சிறந்ததொரு முகாமைத்துவக் கருவியொன்றேயாகும். நிலையியற் குழுக்களை மீள்தாபிப்பதற்கும், பிரஜைகள் ஆலோசனைக் குழுக்களையும், பிரஜைகள் நிலையத்தையும் அமைப்பதற்கும் வாய்ப்பொன்றை பட்டயம் உருவாக்கியது. பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறை இடம்பெறும் வரையில் பெரிதுமே தன்னிச்சையாகவே இவை யாவும் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாநகர சபையில் கணனி அடிப்படையிலான இணையதளமொன்றை ஆரம்பித்து வைத்தமை தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பொன்றை உருவாக்கியுள்ளது. இது மீண்டும் தாபனத்தினதும், அதன் செயற்பாடுகளினதும் ஒளிவுமறைவின்மையைப் பராமரிப்பதற்கு பங்களிக்கின்றது.

காத்தான்குடியில் பெண்களின் பங்கெடுப்பினை பிரஜைகள் பட்டயம் மேம்படுத்தியுள்ளது. கைவினைப் பொருள் உற்பத்தி மீது காத்தான்குடி நகர சபையினால் ஒரு பெண்கள் குழு பயிற்றுவிக்கப்பட்டது. இக் குழு தற்போது பாரியதொரு சனசமூக அடிப்படையிலான தாபனமாகும். சந்தைப்படுத்தல் போன்ற விவகாரங்களைக் கவனத்திற்கெடுப்பதற்காக இந்த சனசமூக அடிப்படையிலான தாபனத்திற்கு ஆதரவளிப்பதென செயற்குழுவும், நகர சபையும் தீர்மானித்துள்ளன. குடிசைக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு பெண்களுக்கு ஆதரவளிப்பது தொடர்பிலான செயற்பாடுகளிலும், தொழில்நுட்பம், பெறுமதியைச் சேர்த்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன மீது அவர்களைப் பயிற்றுவிப்பதிலும் அவர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள். வர்த்தகச் சங்கம் அவர்களுடன் கூட்டுமுயற்சியில் ஈடுபட்டுள்ளது. பள்ளிவாசல் சம்மேளனம் பிரதிநிதிப்படுத்துவதுடன், நகர சபையின் செயற்பாடுகளில் அதிகளவில் சனசமூகமளிக்கின்றது. நகர அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் கலந்தாய்வதற்கு இலகுவாக இருப்பதாக நகர சபை கண்டறிந்துள்ளது. அபிவிருத்திப் பணியைத் தடுப்பதன் மூலம் வழக்காடுபவர்களுக்கு பிரஜைகளினால் தடைகளும், பயமுறுத்தலும் சனசமூக ஆலோசனையின் விளைவாக மீளப்பெறப்பட்டுள்ளது.

இரு உள்ளூராட்சி சபைகளிலும் பிரஜைகள் பட்டயங்கள் மேலும் திருத்தியமைப்பது அவசியமாகும்.

கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக அபிவிருத்திச் சபைகள், நூலகச் சங்கங்கள், மற்றும் பெண்கள் குழுக்கள் போன்ற சனசமூக அடிப்படையிலான தாபனங்களுடன் அதிகளவு கூட்டுமுயற்சியை மேற்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன், திண்மக் கழிவு, போக்குவரத்துப் பிரச்சனைகள், வருமானத்தை உயர்த்துதல், சூழலியல்-உல்லாசப்பயணம் மூலம் வாழ்வாதாரங்கள், வியாபார முன்னேற்றங்கள் ஆகியனவற்றுக்கு அப்பால் கருத்துப்பரிமாறல்களின் நோக்கெல்லையை விசாலிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெறுகின்றன. பங்காளர் ஆலோசனைகளுக்கும், இணைந்த கண்காணித்தலுக்கும் மீள்-நோக்கிலான கவனத்தைச் செலுத்துகின்றது. இது பிரஜைகள் பட்டயத்தின் நடைமுறையின் வெற்றிக்கு பிரதானமாக காரணத்தைக் கற்பித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளலும் பங்குடமையை வளர்த்தலும்"

"පුරෝගාමී අත්දැකීම් හුවමාරු කරගැනීම සහ සම්බන්ධතා වර්ධනය "

"Sharing Good Practices and Developing Partnerships"



வட மாகாண உள்ளூராட்சி திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு வட மாகாணம்

පළාත් පාලන දෙපාර්තමේන්තුව, පළාත් පාලන අමාත්‍යාංශය උතුරු පළාත

Department of Local Government, Ministry of Local Government Northern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org